
20 காசு

# காஞ்சி

4-9.69 நிறுவனர்: அண்ணாதுரை


14.9.69



12.9.69

# பக்கத்து வீட்டுக்காரியைப் பார்த்து!



"சிறு வயதில், என் தாயார் எனக்கொரு கதை சொல்வார்கள், ஒரு வீட்டில், ஒரு மருமகளிருந்தாளாம், அவளுக்கொரு மாமியார், அந்த மாமியார் மீது அந்த மருமகளுக்கு அபாரமான அன்பு—ஆச்சரியத்தோடு எங்கே என்று கேட்காதீர்கள்! கதையல்லவா? அதனால், அந்த மருமகளுக்கு மாமியார் மீது அன்பு!!—கணவனைவிடக்கூட, மாமியாரிடம் ஆசையும் அன்பும் அதிகம். காலையில் எழுந்ததும் மாமியாருக்கு மரியாதை செய்யாமல் எந்த வேலையும் செய்யமாட்டாள். மத்தியானமும் அப்படியே, இரவும் வணங்கி அன்பு காட்டாமலிராள். வயதான மாமியார் ஆனதால், கொஞ்ச நாளைக்கெல்லாம், இறந்துவிட்டாள். மருமகளுக்கு ஏற்பட்ட சோகம் கொஞ்சமல்ல, மாமியாருக்குப் பதில் மரத்தாலே பொம்மை செய்தாள்! அந்தப் பொம்மையை வணங்குவாள். ஓய்ந்த நேரத்தில் அதுகூடவே உட்கார்ந்திருப்பாள், கணவன் வரும்போதுகூட பொம்மையுடனேயே இருப்பாள், ஒரு நிமிடமும் அந்தப் பொம்மையைவிட்டுப் பிரிவதில்லை.

"என்னடா, பெரிய தொல்லையாய் போயிற்றே! சாவதற்கு முன்பு தான் மாமி, மாமி என்று உயிராயிருந்தாள் என்று பார்த்தால் இப்போது அதுவே பெரிய பைத்தியமாகிவிட்டதே, நான் வந்தால்கூடக் கவனிக்காமல் பொம்மையைக் கும்பிடுவதும் கொஞ்சுவதுமாகயிருக்கிறாளே" என்று நினைத்தான் அவள் கணவன். கொஞ்சநாள் போனால் சரியாகிவிடும் என்று நினைத்தான். வரவர வளர்ந்ததே தவிர குறையவில்லை—சதா சர்வ காலமும், பொம்மையை வைத்துக்கொண்டே இருக்கலானாள். எரிச்சல் அதிகமாயிற்று அந்தக் கணவனுக்கு. ஓர் இரவு பொம்மையையும் எடுத்தெறிந்து, அவளையும் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினான். வீட்டைவிட்டு விரட்டப்பட்ட அந்த மனைவி, இருளிலே போகப் பயந்தாள் ஊர் எல்லைக்குப்போய் அங்கே ஒரு மரத்தடியில் இரவைக் கழித்துவிட்டு, பொழுது விடிந்ததும் எங்காவது போகலாம் என்று நினைத்தாள். அப்போதும், கூடவேயிருந்தது அந்தப் பொம்மை. படுத்த அவள், யாரோ வரும் காலடி கேட்டுப் பயந்துபோய் மரத்தின் மீது ஏறி, அங்கே ஒரு கிளையில், மார்போடு பொம்மையை அணைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள், வந்தது வேறு யாருமல்ல! திருடர்கள்!!

அவள் எந்த மரத்தில் ஏறி உட்கார்ந்திருந்தாளோ, அதனடியிலேயே வந்து உட்கார்ந்து, தாங்கள் திருடிக்கொண்டு வந்த பொருள்களையெல்லாம் எடுத்து வைத்து, யாருக்கு எவ்வெவ்வளவு என்று பங்குபோட்டுக் கொண்டு இருந்தனர். வைர அட்டிகையும், தங்க நகைகளுமாகப் பல பொருள்கள் இருந்தன. மேலே உட்கார்ந்திருந்த அந்த பெண், பயத்தினாலோ அல்லது தூக்கக் கலக்கத்தினாலோ கெட்டியாகப் பிடித்திருந்த மரப்பொம்மையை விட்டுவிட்டாள். அது நேராக, அந்தத் திருடர்கள் மத்தியில் வந்து விழுந்தது. திருடர்கள், அந்தப் பொம்மையைப் பார்த்தார்கள். காதறுத்தாலும், கன்னக்கோலிடத் தெரியுமென்றாலும், மூட நம்பிக்கை வசப்பட்டவர்கள்தானே திருடர்களும், அதனால் குட்டிச்சாத்தான் வேலையோ பேயோ பிசாசோ என்று திருடிய பொருள்களையெல்லாம் விட்டுவிட்டு ஓட்டமபிடித்தனர். பொழுது புலர்ந்தது. அந்தப பெண்ணும மெதுவாக இறங்கி வந்து கீழே பார்த்தாள், பொம்மை கிடந்த இடத்தில், ஏராளமான நகைகள் கிடந்தன, திகைப்பு ஏற்பட்டது!! எல்லாவற்றையும் வாரிச் சுருட்டிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினாள். கணவனும் முதலில் முகத்தைத் திருப்பிக் கொண்டான். மனைவியின் கையிலேயிருக்கும் வைரத்தையும் தங்கத்தையும் கண்டதும் கோபம் எல்லாம் போய்விட்டது. பல கணவர்களுக்கு மனைவிமார் பிடிக்காவிட்டாலும் அவள் கொண்டுவரும் சீதனமும் செல்வமும் பிடிக்கிறதல்லவா? அந்த இனத்தைச் சேர்ந்த கணவன் என்று வைத்துக் கொள்ளுங்களேன்! கட்டினான்—அணைத்தான்—கொஞ்சினான்—குலவினான்.

இதைப் பக்கத்து வீட்டுக்காரி பார்த்தாள் எப்படித் திடீரென இவ்வளவு செல்வம் வந்ததடீ?—என்று இந்த மருமகளைக் கேட்டாள். மருமகள் நடந்த கதையைச் சொன்னாள். உடனே பக்கத்து வீட்டுக்காரி என்றுமில்லாதபடி தன் மாமியாரின் காலில் போய் விழுந்தாள். சீக்கிரம் சாவதற்கான வழிகளைச் செய்தாள். செத்ததும் பொம்மை ஒன்றைத் தயார் செய்தாள்; அதைக் கும்பிட்டாள்; கொஞ்சினாள்; அவள் கணவன் இவள் தன்னைக் கவனிக்காததைப் பற்றிச் சிறிதும் இலட்சியம் செய்யாதவன் என்றாலும், அவளிடம் பக்கத்து வீட்டில் நடந்ததைச் சொன்னாள். அதேபோலத் தன்னையும் கோபித்து வெளியே துரத்தி விடுமாறு செய்தாள். எந்த மரத்தைக் குறிப்பிட்டுச் சொன்னாளோ, அதே மரத்தடிக்குத் தானும் அந்த மரப்பொம்மையுடன் போனாள். திருடர்கள் வருவது தெரிந்ததும் மரக்கிளையில் ஏறினாள். வழக்கம்போல அவர்கள் வந்தார்கள். திருடியதைப் பங்கிட்டுக் கொண்டார்கள். அந்தச் சமயம் பார்த்து, கையிலிருந்த மரப்பொம்மையை நழுவவிட்டாள். பார்த்தார்கள் திருடர்கள்; முன்புபோல பயந்துவிடவில்லை! "இதென்னடா போன வெள்ளிக் கிழமையும் இப்படி நடந்தது. இப்போதும் இப்படி நடக்கிறது. இதில் ஏதோ சூது இருக்கிறது" என்று சந்தேகத்தைக் கிளப்பினான் ஒருவன். மரத்தை அண்ணாந்து பார்த்தார்கள்—மாட்டிக்கொண்டாள் இவள். நையப்புடைத்து அவளிடம் இருந்ததையும் பிடுங்கிக்கொண்டு ஓடஓட விரட்டியடித்தார்கள்! வெட்கப்பட்டு அவளும் வீடு திரும்பினாள்!!"

(1958 அக்டோபர் திங்கள் சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் அறிஞர் அண்ணா சொன்ன கதை.)

★

# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 6 | 14—9—69 | இதழ் 9


## பிறந்தநாள் பெருவிழா!

இந்தக்கிழமை, தமிழ்நாடெங்கு மட்டுமல்லாமல், தமிழர் வாழும் பலபகுதிகளிலும் தமிழ், தமிழர் மீது அக்கறைகொண்டோர் வதிகின்ற இடங்களிலெல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள்விழா, பெருங்கோலாகலத்தோடு கொண்டாடப் படுகிறது.

தமிழகத்தின் முக்கியமான சில நகரங்களில் தமிழக அமைச்சர்கள் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்புடையதாக்கி இருக்கிறார்கள். இந்த வகையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், இந்தியக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள் தலைமையில், பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் முன்னிலையில் சேலத்திலும், நாவலர் அவர்கள், சென்னையிலும், மதியழகன் அவர்கள் கோவையிலும், சத்தியவாணிமுத்து அவர்கள் புதுச்சேரியிலும், என். வி. என். அவர்கள் பட்டுக்கோட்டையிலும், ப. உ. ச. அவர்கள் காலையில் சேலத்திலும், மாலையில் திருச்சியிலும், மாதவன் அவர்கள் ஈரோட்டிலும், சாதிக்பாட்சா அவர்கள் உதக மண்டலத்திலும், முத்துசாமி அவர்கள் சேலத்திலும், ஆதித்தனார் அவர்கள் திருநெல்வேலி, நாகர்கோயில் ஆகிய இடங்களிலும், சுப்பையாஅவர்கள் ஆலங்குடி, புதுக்கோட்டை நகரங்களிலும், வேழவேந்தன் அவர்கள் காஞ்சிபுரத்திலுமாகக் கலந்துகொண்டு சிறப்புச் செய்துள்ளனர்.



அமைச்சர்கள் கலந்துகொண்ட பெரும்பான்மையான நகர்களில் மட்டுமல்லாமல், கழக முன்னணியினர் கலந்துகொண்ட பல்வேறுஊர்களிலும் பேரறிஞர் அண்ணா அவர்களுக்குச் சிலை நிறுத்தி இருக்கிறார்கள். பல ஊர்களில் கழகக் கட்டிடங்களில் படத்திறப்பு விழாச் செய்திருக்கின்றனர்.

சிலை அமைப்பும், படத்திறப்பும் மட்டுமல்லாமல் விழாவினைச் சிறப்பிக்கும் வகையில் கழகத்தோழர்கள் கலை நிகழ்ச்சிகளும், கருத்தரங்கங்களும், பட்டிமன்றங்களும்அமைத்து மகிழ்ந்திருக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு 1969 செப்டெம்பருடன் 60 ஆண்டுகள் முற்றுப்பெறுவதனால் 60 ஊர்களில் அண்ணாவுக்குச் சிலையமைக்கும் முயற்சியிலீடுபட்டு, வெற்றியுங்காண முன்னின்று முனைந்தவர்கள் மட்டுமே, பேரறிஞர் அண்ணா அவர்களின்பால் கொண்டுள்ள பெருமதிப்பை வெளிக்காட்டிக்கொண்டவர்கள் என்று யாரும் மதிப்பிட முடியாது. படத்திறப்பு, கலையரங்கு, பட்டிமன்றம் போன்ற வேறுபல நிகழ்ச்சிகளின் மூலம் தன் அன்பினைக் காணிக்கையாக்கி இருப்பவர்கள் எல்லாருமே நன்றிக் காணிக்கை செலுத்தியவர்கள் என்றுதான் கொள்ளவேண்டும்.

கழகத் தோழர்கள் பிறயாரையும்விட பேரறிஞர் அண்ணாவின்பால் கொண்ட பெருமதிப்பை, இரவு பகல் எண்ணாத–காடு மேடு கருதாத கடும் உழைப்பின் மூலம் ஒரு ஆட்சியையே அமைத்துத்தந்திருப்பதன் மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார்கள் என்கிறபோது, கழகம் அவர்களுக்குக்காலமெலாம் கடமைப் பட்டிருக்கிறது.

இந்தக் கடமை காரணமாகவே கழக அமைச்சர்களும், தலைவர்களும் கடும் உழைப்பை மேற்கொண்டு மக்களுக்கு நல்வாழ்வளிக்கத்தக்க விதத்தில் நடைமுறைகளை வகுத்துக்கொண்டு செயல்படுகிறார்கள் என்பதனைக் கழகத் தோழர்களும் உணர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

தோழர்களது இந்த குடும்பப் பாசம் மிகுந்த உணர்ச்சிதான் நாடெங்கும் அறிஞர் அண்ணா அவர்களது பிறந்தநாள் விழாவிலே பிரகாசித்திருக்கிறது.

1969ஆம் ஆண்டைப் பொறுத்தமட்டில் இந்தியத் துணைக்கண்டத்துக்கு ஒருவிதத்திலும், தமிழகத்திற்கு இரு விதத்திலும் மிக முக்கியமான ஆண்டாகும்.

காந்தியடிகளது 100-வது ஆண்டு விழாவினைத் துணைக்கண்டம் முழுவதும் பல்வேறு விதங்களில் கொண்டாடிச் சிறப்பித்துக் கொண்டிருக்கிறது.

தமிழகமோ, தென்னாட்டுக் காந்தியடிகளது மணி விழாவைப் பிறந்த நாளோடு கொண்டாடிக் களிக்கிறது. அதேபோல் திருவள்ளுவப் பெருந்தகையின் ஈராயிரமாண்டு நிறைவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மற்ற எவரையும்விட, காந்தியடிகளுடனும், வள்ளுவப் பெருந்தகையுடனும் மிக அதிக அளவுக்கு இணைத்துப் பேசப்படுகிறவர் என்ற வகையில் இன்னும் அதிகமான சிறப்புக்குரியவர் என்றுவதனைத் தோழர்கள் உணர்ந்து ஏற்ற விதத்திலெல்லாம் விழாவெடுத்துச் சிறப்புச் செய்திருக்கிறார்கள்.

இதுவரையில் மாமேதை அண்ணா அவர்கள், தம் பிறந்தநாள் செய்தியாக விடுத்துவந்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதனையே, "காஞ்சி"க்குரிய உரிமையில், கழகத் தோழர்களுக்கென்று அண்ணா அவர்களது சார்பாக இப்போது எடுத்து வழங்குகிறோம்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மாமந்திரத்திற்கு இருக்கும் வலிமை, எம்மந்திரத்திற்கும் இல்லை என்பது தோழர்கள் உணர்ந்ததேயாகும். எனவே இதன் வழி நின்று செயல்பட அனைவரையும் வேண்டுகிறோம்; நன்றி கூறிக்கொள்கிறோம். வாழ்க அண்ணாவின் புகழ்!

# அன்புத் தெய்வம்!

—புலவர் தோழப்பன்



பண்ணோடு விளையாடும் சோலை, சூழும்
பண்பாடு விளையாடும் நாடு, இன்பக்
கண்ணோடு விளையாடும் காட்சி, பொன்னிக்
கரையோடு விளையாடும் அழகு போல,
மண்ணோடும் விண்ணோடும் உறவாய் மக்கள்
மனத்தோடு விளையாடும் 'அன்புத் தெய்வம்'
அண்ணாவின் உள்ளத்தில் அண்ணா ஞக!
அவர்வாழும் இதயந்தான் உலக மாகும்!

தமிழ்நாடு ஈன்றதவப் புதல்வன் அண்ணா,
தம்பியரில் நான்ஒருவன் என்னும் பேறு,
அமிழ்தாகும்; அப்பேறு அடைந்த யாரும்,
அகிலத்தில் பெறும்பேறு எந்தப் பேறு?
உமிநீங்க முளையேது? அண்ணா இன்றி
உருவாகி முளைக்கின்ற கருத்து ஏது?
தமிழேஉன் கதியென்ன? எண்ணும் போது,
தமிழுக்குச் சாவில்லை, வாழ்வார் அண்ணா!

கண்ணியத்தின் காவலனும் அண்ணா! நல்ல
கட்டுப்பாட் டுணர்ச்சியுடன் கடமையாற்றி,
புண்ணுடைய சமுதாயச் சழக்குச் சாதிப்
பூசலறப் பொன்னுடலை அர்ப்ப ணித்தோன்
தண்ணீரும் தீயாகும், ஆனால் அண்ணன்
தன்மைக்குத் தீயேது? தம்பி! என்று
தன்பாதை படைகண்டார், படைக்கும் அஞ்சாத்
தம்பியரின் நற்குடும்பத் தலைவ ராளுர்.

அறந்துஞ்சும் நற்பாதை அண்ணன் பாதை,
அப்பாதை அனைவர்க்கும் ஏற்ற பாதை
மறம்அஞ்சும் அண்ணன்தான் சென்ற பாதை,
மதியோடு அன்பு விளையாடும் பாதை
திறம்வேண்டும், தீதற்ற உள்ளம் வேண்டும்,
தீந்தமிழின் உயிர்வேண்டும், பண்பு வேண்டும்,
அறியாமை அவர்பாதை அகல வேண்டும்,
அதுவேநம் அண்ணாவை மகிழச் செய்யும்!

# ஹோ-சி-மின் பற்றி அமரர் அண்ணா!

'பா', நிகுயன்-அய்-குவாக்' "சோங்-மோன்சோ" "டான்தான்" என்ற பல பெயர்களில் உலகின் அநேக நாடுகளில் வாழ்ந்திருக்கிருர் ஹோ-சி-மின். அவருக்கு ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்யன், ஜப்பான், சீனம், போச்சுகீஸ், ஆகிய ஏழு மொழிகளில் நல்ல அனுபவம் உண்டு.

ஏழைக் குடியானவ வகுப்பில் பிறந்து தனது 19-வது வயதில் தாய், தந்தை தனயன், தமக்கை ஆகியோர் பிரெஞ்சு ஏகாதிபத்திய அதிகாரிகளால் சிறை பிடிக்கப்பட்டுப் போவதைப் பார்த்தது முதல் 'ஹோ'வை அரசியல் உலகம் இழுத்துக்கொண்டது. பிரெஞ்சுத் தளையிலிருந்து இந்தோ-சீனத்தை விடுவிப்பதற்காக உள்ளத்தின் உறுதி ஒன்றை மட்டும் சுமந்து கொண்டு நாடுகள் பல சுற்றியவர் இவர்.

அந்த நாட்களில் அவர் பார்த்தது சமையல்காரன் வேலையிலிருந்து பத்திரிகை ஆசிரியர் வேலை வரை. விடுதலைப் போராட்டத்துக்காக சீனுவின் ஆதரவைப் பெறவேண்டி இந்தோ சீனத்திலிருந்து இராணுவக் கண்காணிப்பைத் தாண்டி நடந்தே பயணம் புறப்பட்ட போதுதான் ஹோசிமின் என்ற பெயரை மேற்கொண்டார். கடைசியில் இராணுவத்தினரிடம் சிக்கி கைகால் விலங்குகளிட்டு 80 நாட்கள் காடுகளிலும் மலைகளிலும் நடத்தியே அவரை இழுத்துச் சென்று பல ஆண்டு சிறைவாசம் தந்தனர்.

1945 செப்டம்பர் மாதம் 2-ந் தேதி 'எனது அருமைக் குழந்தைகளே' என்று இலட்சக்கணக்கான மக்கள்முன் சுதந்திரப் பிரகடனத்தைப் படித்த 'ஹோ' பின்னர் தோன்றிய அரசியல் நிலைமைகளால் இன்று ஹனுயைச் சலைநகராகக் கொண்ட வடக்கு வியட்நாமின் ஒரே தலைவராகத் திகழ்கிருர்.

சீனுவின் அருகில் இருந்துகொண்டு இரஷ்யாவின் நட்பினையும் தொடர்ந்து கடைப்பிடித்து நீண்ட நெடுங்காலமாகப் பதவி வகித்துவரும் இவரது அரசியல் தந்திரம் அமெரிக்கர்களையும் திகைக்க வைக்கிறது.

கண்மூடித்தனமான பின்பற்றுதல் என்ருலும் 'ஹோ'வுக்கு மக்களிடையே செல்வாக்கு அதிகம். ஒரு சமயம் அவரது சட்டை ஒன்று 4,67,000 இந்தோ சீன நாணயத்துக்கும், படம் ஒன்று 1,80,000 நாணயத்துக்கும் விலைபோனது!

மணவாழ்க்கை மேற்கொள்ளாத இந்த ஆயுள் பிரம்மச்சாரிக்கு குழந்தைகளிடம் சிறப்பான பெயராம். 'நீ சாப்பிடவில்லையென்ருல் 'ஹோ' மாமா கோபித்துக் கொள்வார்'' என்று தாய் சொன்னால் போதுமாம்! உடன் வட்டிலை வெறுமையாக்கிவிட்டு நான் சாப்பிட்டு விட்டேன் என்று ஹோ மாமாவிடம் சொல்லிவிடம்மா'' என்னுமாம் குழந்தை!

அரை நூற்ருண்டுகளுக்குமேல் தென்கிழக்கு ஆசியாவில் சரித்திரம் சமைத்துக்கொண்டிருக்கும் 'ஹோ' உலகத் தலைவர்கள் வரிசையில் ஒருவர்.

★



# அண்ணா புகழ் நீடு வாழ்க!

## உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துசாமி.

ஏழைகளுக்காக, பின்னடைந்தவர்களுக்காக தாழ்த்தப் பட்டவர்களுக்காக ஒரு கட்சியைத் தோற்றுவித்து வளர்த்து, ஜனநாயக முறையில் ஆட்சியையும் கைப் பற்றியதுதான் பேரறிஞர் அண்ணா அவர்களின் சாதனைகள் அனைத்திலும் மணிமகுடம் போன்ற சாதனை. 1967 பொதுத் தேர்தலில் அகில இந்தியாவும் வியக்கு மளவுக்கு, வெளிநாடுகள்கூட திரும்பிப் பார்க்கு மளவுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் மகத்தான வெற்றியைப் பெற்றது என்றால், பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆற்றலும் முன்னணித் தலைவர்களின் ஒத்துழைப்பும், தொண்டர்களின் உழைப்புமே அதற்குக் காரணமாகும். உலக வரலாற்றிலேயே ஒரு தனிச் சித்திரமாக விளங்கவல்லது தி. மு. க. வின் வளர்ச்சியின் வடிவம்.

எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு, தொகுதி அடிப்படையில் ஒத்துழைக்கின்ற கூட்டணி நிறுவி, அந்த வலிமை தொடர்ந்து வளரத்தக்க வழியையும் காட்டிச் சென்றவர் அறிஞர் அண்ணா. கூட்டணியில் சேர்ந்த கட்சிகள் தங்கள் தனித் தன்மையை இழக்க வில்லை. குடியரசுத் தலைவர் தேர்தலில் சுதந்திரா கட்சி யாரை ஆதரித்தது, எந்த முறையில் இயங்கியது என்பதை நாடு அறியும் தி. மு. க. யாருக்கு ஆதரவு தந்தது என்பது யாவரும் அறிந்ததே. இப்படி தங்கள் கொள்கைக்கு ஏற்ப மாறுபட்ட போக்கில் சென்றாலும், மாநிலத்தின் பொது நலன் கருதி, சிறந்த முறையில் ஒத்துழைக்கின்ற பண்பு வளர்ந்தே வருகின்றது. தமிழரசுக் கழகம், முஸ்லிம் லீக் மற்றும் ஏனைய கட்சிகள், தங்கள் கொள்கைக்கு ஏற்ற முறையில் இயங்கினாலும், கூட்டணியின் இணைப்பு வலிமை மிக்கதாகவே விளங்குகிறது. அறிஞர் அண்ணா அவர்களும் கலைஞர் கருணாநிதி அவர்களும் இந்த வகையில் தரணி வியக்கும்படியாகத் தங்கள் ராஜதந்திரத் திறனைக் காட்டியிருக்கிறார்கள்.

அண்ணா அவர்களின் சொந்திர மதி நுட்பம், பண்பு ஆகிய மூன்றுமே அவரை தன்னிகரில்லாத தலைவராக உயர்த்தின. அவருடைய சொல் நயம், சாமான்ய மக்களை மட்டுமல்ல, தலைவர்களையும் கவர்ந்தது மாநிலங்கள் அவையில் அவர் நிகழ்த்திய முதல் உரை, ஒரு நாட்டின் வரலாற்றையும் ஒரு இயக்கத்தின் வரலாற்றையும் அப்படியே படம் பிடித்துக் காட்டியது. அகில இந்தியாவும் அவரது திறன் கண்டு வியந்தது.

யாரையும் மனம் நோகச் செய்யாத இளகிய உள்ளம், அவருடைய உள்ளம். அரசியலிலும் பொது வாழ்விலும் ஒரு குடும்ப பாசத்தை உருவாக்கினார் "எதிர்க்கட்சியை மதித்து நடப்பதுதான் என் வெற்றியின் ரகசியம்" என்று கூறினார். எல்லாரிடமும் அன்பு காட்டும் இயல்பும், அரவணைத்துச் செல்லும் இயல்பும், வன்முறைக்கு இடம் தராத மனப்பாங்கும், தாழ்த்தப்பட்ட மக்கள், சிறுபான்மையினர் விஷயத்தில் அவருடைய பரிவும், தென்னாட்டுக் காந்தி என்ற நிலைக்கு அண்ணா அவர்களை உயர்த்தின.

அண்ணா அவர்களால் தாய் மொழியாம் தமிழ் மொழி தனக்குரிய இடத்தைப் பெற்றது. குறள் நெறி, தமிழ் மக்களுக்கு ஏற்ற நெறியாக எங்கும் பரவியது. ஒன்றே குலம் என்ற குறிக்கோளை நோக்கி முன்னேறும் வகையில் கலப்பு மணத் தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கம் வழங்கும் திட்டத்தை உருவாக்கினார் அண்ணா அவர்கள். ஏழை மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைப்பதற்காக, விலைவாசி ஏற்றம் என்ற விஷ வட்டத்தைத் தகர்ப்பதற்காக, அவர் மேற்கொண்ட படி அரிசித் திட்டம், மக்களின் பேராதரவைப் பெற்றது. கிளர்ச்சித் தலைவராக மட்டுமின்றி, எதிர்க்கட்சித் தலைவர் என்ற நிலையில் மட்டுமல்லாமல், ஆட்சித் தலைவர் என்ற முறையிலும் தமக்குரிய தனித் திறமையை வெளிப்படுத்தினார் அண்ணா அவர்கள்.

தாம் மேற்கொண்ட பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்ற, நல்லதொரு தலைமையினையும் உருவாக்கிய பெருமை அண்ணா அவர்களுக்கு உண்டு. கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் இன்று தி. மு. க. ஈடும் எடுப்பும் மற்ற கட்சியாக விளங்கி வருகின்றது. பிரச்னைகளைத் தீர்ப்பதிலும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவைகளை வளர்ப்பதிலும், தமக்குரிய ஆற்றலை வெளிப்படுத்தியிருக்கிறார்.

தி.மு.க. தான் வழிவழியாகக் கடைப்பிடித்து வந்த கொள்கைக்கு ஏற்ப, தி. மு. க அமைச்சரவை மொழிச் சிக்கலுக்கு இரு மொழித் திட்டம் மூலம் சரியான தீர்வினைக் கண்டிருக்கிறது. ஏழை மக்கள் நலன்களுக்கு அரண் அமைக்கும் வகையில் மதுவிலக்குத் திட்டத்தில் அரசு உறுதிகொண்டுள்ளது. வறட்சித் துயர் துடைப்புப் பணிகளிலும், வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் நடவடிக்கைகளிலும் அரசு முனைப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

இந்த வளர்ச்சித் சித்திரம் இன்னும் எழிலும் ஏற்றமும் பெறவேண்டும். அதற்காக, அண்ணா அவர்கள் காட்டிய வழியில் கட்டுப்பாடாக பணியாற்றுவதே நம்மை எதிர்நோக்கியுள்ள வேலையாகும். இவ்வேலையைச் செய்து முடிக்க உறுதி கொள்வதின்மூலம் அண்ணா அவர்களின் நினைவுக்கு நமது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வோமாக!

அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் புகழ் என்றும் வாழ்க!

# Kamala
# Sugar Mills Ltd.,

(GLUCOSE FACTORY)

**Amaravathi Nagar (P. O.)**
**Udumalpet S. Rly.,**

Coimbatore Dt.

★

## Liquid Glucose "Grade-A"

Now we have started production of our New Glucose "Grade-A" This Glucose is purified by "Demineraliser" which gives good colour and avoids stickness.

So it will be a great advantage to the consumers of glucose liquid for the manufacture of confectionary Sweets, Biscuits, Syrups Aerated waters and Pharmaceuticals.

Our Distributors for Madras. South Arcot North Arcot and Chingleput Districts:

**P. Singaravelu,**
310, Wall Tax Road, Madras-3

OUR SALES BRANCHES AT:

MADURAI: 28-B, ELUKADAL AGRAHARAM.
TRICHY: 9, CHINNAKKADAI STREET.
KUMBAKONAM: 84, J. P. KOIL EAST STREET.



# அண்ணன் இருந்திருந்தால்...

அன்புள்ள நண்பா!

தம்பி! தம்பி!! தம்பி!!! என்று நொடிக்கு நூறு முறை அழைத்து, நெஞ்சு நிரம்பிய வாஞ்சையுடன், நாட்டுக் காற்றவேண்டிய பணிகளைச் சுட்டிக் காட்டி, பம்பரம்போல் சுழன்று செயலாற்றும் ஆற்றலை உனக்கும் எனக்கும் தந்ததுடன், தானும் மேற்கொண்டு, தலைவர் என்ருல் அவர் எப்படி இருக்கவேண்டும் என்று உலகுக்கே இலக்கணம் வகுத்துத் தந்திருக்கிற பேரறிஞர் அண்ணு அவர்களுக்கு இன்று மணி விழா!

கொடுமை மிக்க உலகின் கொடுங் கரங்களுக் கிடையே சிக்கி, சிந்தையிலே வெந்தணல் கொட்டி வேதனை மூட்டுவோருக்கிடையே சிரித்த முகத்தோடு 60 ஆண்டுகளைக் கழித்துவிட்டு 61-ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நம் அண்ணனுக்கு இன்று மணி விழா!

இல்லந்தோறும் வாழ்கின்ற நல்ல உள்ளந்தோறும் இன்று மணி விழா நடைபெறும்—அண்ணன் பேரால்! அதுபோன்ற கோலாகலம்! குதூகளிப்பு! நாடெங்கணும்.

ஊர்கள்தோறும் தோரண மாலைகள்—தெருக்கள் தோறும் வண்ண வண்ணச் சுவரொட்டிகள்! வாழ்த்தி வாழ்த்தி அகங் களிக்கும் அந்த மன்னன் பேரைச் சொல்லி!

காதல் தலைமகன், காதல் கிழத்தியின் முகத்தை ஏறிட்டுப் பார்ப்பதிலே பொங்கி வழியும் தாகம்—அந்தப் பூமானின் பெயரை விண்ணதிரப் பொழிவதிலே தோன்றும்!

மழலை மொழி கேட்டு, மதுமாந்திய வண்டெனக் கிறங்குவோர்போல் அண்ணு என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே ஒருவித மயக்கம்! ஏக்கம்! கிறக்கம்! எல்லாம் எங்கெங்கும் காணக் கிடைக்கும் சாதாரண காட்சிகள்!

இன்று அண்ணனுக்கு மணி விழா.
60-ம் அகவை நிறைவு விழா.

ஆனுல், ஆனுல்...ஆனுல்...

கண்கள் பனிக்கின்றன! காதுகள் எந்த ஒலியையும் ஏற்க மறுக்கின்றன! உடல்கூட வலிவிழந்து பூமியில் நிற்கமாட்டாது தள்ளாடத் தொடங்குகிறது! அது ஏன்?

நச்சுக் கிருமிகளால், டாக்டர் அண்ணு அவர்கள் ஏழு திங்களுக்கு முன்பு கொலை செய்யப்படாதிருந்திருந்தால்.........

இன்று—அண்ணன் அமர்ந்திருக்கும் இடம் எத்தனை எழிலும் பொழிலும் ஏந்தியதாயிருக்கும்?

அண்ணன் அமர்ந்திருப்பார்.

அருகே, இன்று இசபெல்லா மருத்துவ மனையில் இருப்பதைப்போல அல்ல—அண்ணியார் அமர்ந்திருப்பார்கள்.

இருவரையும் சுற்றி அண்ணனின் பேரப் பிள்ளைகளாம் மலர்வண்ணனும், கண்மணியும் 'தாத்தா! தாத்தா! என்ற கிண்கிணி நாத மழலையினைச் சிந்திக் கொண்டிருப்பார்கள்.

என் ஆசிரியர் ஒருபுறம்; அவருக்கு மூத்தவர் இன்னேர்புறம்; இளையவர் ஒரு பக்கம்; கடைக்குட்டி மறுபக்கம், மருமகள்கள் ஒருபுறம், மச்சி! மச்சி! என்று குடும்பத் தொடர்புகொண்ட அத்தனைப்பேரும் அன்பொழுக அழைக்கும் அண்ணனின் சகோதரியார் ஒரு பக்கம்!

அண்ணனுக்கு எதிரே, அண்ணனின் அன்னையார், நாற்காலி யொன்றில் அமர்த்தப் பட்டிருப்பார்கள்.

இவர்கள் அத்தனைப்பேரைச் சுற்றியும் தமிழக அமைச்சர்களும், அண்ணனின் அன்புத் தம்பியரும் வீற்றிருப்பர்!

மலர் மாலைகள் மலையெனக் குவிந்திருக்கும் ஒரு புறத்தே! பழவகைகள் உற்பத்தித் தோட்டங்களென குவிக்கப்பட்டிருக்கும் மறுபுறத்தே!

வயிற்றுக்கு விருந்து ஒருபக்கம்.

அறிவுக்கு விருந்து இன்னொருபக்கம்.

தமிழகமே தலைநகருக்குத் திரண்டிருக்கும்; திரண்டோர் போக எஞ்சியோர், இருக்குமிடத்தையே எழில் வண்ணமாக்கி ஏந்தலின் பேரால் இனிய விழா எடுத்திருப்பர்.

புகழ்க்கன்னி பொருமைப்பட்டுப் போயிருப்பாள்!

அறிவுத் தெய்வம்கூட அலமந்துப் போயிருக்கும்!

அண்ணன், இன்று இருந்திருந்தால் —

**அண்ணா**

அதிகாரம் ஒரு போதை! பருகப் பருக இனிக்கும். பழகப் பழக அதிலே சொக்கி விழாதவர்கள் வெகு சிலரே. அதிலும் அரசியல் அதிகாரம், அதிக மான போதை தரும். அதைப் பருகு வோர், பரமானந்தமடைந்து, பாதம் பூமியிற் சரியாகவும் படியாதபடி தாண் டவமாடுவர்! அதைத்தான் அறிஞர்கள் அரசியற் கோமாளிக் கூத்தென்பர்! அந்தப் போதையின் பயனாக எதேச் சாதிகாரமும், சர்வாதிகாரமும் ஏற் படும். தட்டிக் கேட்க ஆளில்லாவிட் டால் தம்பி சண்டப்பிரசண்டனாமாட் டானா? அதைப்போலவே தனக்கொரு எதிரியும் இல்லை என்ற மனப்பான்மை யும் கொண்டுவிட்டால், கேட்கவா வேண்டும் அவர்தம் திருவிளையாடலை! "யாராயினுஞ் சரி!" எனக்கூறி, எதற் கெடுத்தாலும் கர்ஜைக் கட்டி நிற்பர். இதுவே அதிகார வெறி எனப்படுவது.

---

இருந்திருந்தால்......என்றல்லவா நண்பா, எழுத வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டிருக்கிறது எனக்கும், இந்த நாட்டுக்கும்!

இருந்திருந்தால்.........என்று படிக்கவேண்டிய துர்ப்பாக்கியமல்லவா, உனக்கும் உன்னைச் சார்ந்தவர்களுக்கும்!

இருந்திருந்தால்......என்று எழுதியல்லவா செய்திகளைப் போடவேண்டிய துர்ப்பாக்கியம் கழக ஏடுகளுக்கு!

நண்பா! பொங்கிவழியும் கண்ணீரைத் துடைத்துக் கொள்ள முயல்கிறேன்—முயல்கிறாய்—தெரிகிறது!

**அண்ணன் இன்று நம்மோடு இல்லை**

என்று எண்ணும்போது மட்டும்தான் இந்தநிலை! நாம் ஏன் அப்படி எண்ணிக்கொள்ள வேண்டும்? அண்ணனை இழந்துவிட்டோம் என்று எதற்காக நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்?

கழகத் தலைவர்கள் அத்தனைப்பேரும் இன்னும் அண்ணனின் அறிவுக் கருத்துக்களைப் பரப்பிக்கொண்டிருக்கும் ஒளிக்கற்றைகளாய் இருக்கக் காண்கிறோமே!

கழக ஆட்சியின் ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் அண்ணனின் விருப்பங்களும், வேண்டுகோள்களும் உள்ளுரையாய் இருந்து கொண்டிப்பதை உணர்கிறோமே!

அண்ணனையோ, அவர் தந்த அறிவுரையையோ மறந்துவிட்டவர்களாக யாரையும் காண முடியாத நிலை இருந்து கொண்டுதானே இருக்கிறது.

பாண்டிச்சேரி என்ற புதிய மாநிலமேகூட அல்லவா கழகத்தின் வசம் வந்திருக்கிறது.

42க்கும் மேற்பட்ட நகராட்சிகள் நம்மிடத்தே வந்துவிட்டிருக்கிறதென்றனவே!

இவையெல்லாம் நண்பா, நம் அண்ணனின் அரும் ஆற்றலினையும், அறிவுக் கருத்துரைகளையும் நமக்கு முன் நின்று சாற்றிக் கொண்டிருக்கும்போது—

**இன்று நம்மிடையே அண்ணன் இல்லை**

என்று எண்ணங்கொள்ளத் தேவையில்லைதான்! என்றாலும் முடிகிறதா? முடியுமா உன்னால்!

காஞ்சிபுரத்தில் அண்ணா தெரு முனையை அடையும் போதே, 'கீர்' எனகிறது! சிரமப்பட்டு வீட்டு வாசலை மிதிக்கும்போது தள்ளாடிப் போகிறது. உள்ளே சென்று கூட்டத்தையடைந்து அந்த பிரம்பினால் பின்னப்பட்ட சாய்வு நாற்காலியைப் பார்க்கும்போது...ஐயோ!

நுங்கம்பாக்கம் வீடிருக்கும் அவின்யூசாலையை அடையும்போது ஒரு ஏக்கம். வெளிகேட்டைத்தாண்டி வீட்டு வாயிலை மிதிக்கும்போது ஒரு கவிப்பு. படியேறிச் சென்று மாடியில் கூடத்தில் உள்ள அந்த பிரம்பு சாய்வு நாற்காலியைக் காணும்போது...ஐயையோ!

**இன்று நம்மிடையே அண்ணன் இல்லை**

என்பதை உணராமல் இருக்க முடியவில்லையே! நச்சு நோய்க்குப் பலியாகி, நோய்க்கிருமிகளால் கொலையுண்டும்விட்டாரே என்று எண்ணாமலிருக்க முடிகிறதா?

ஏடொன்றைப் படிக்கும்போதும் நூலொன்றைப் புரட்டும்போதும் காண்கின்ற தத்துவ விளக்கங்களை அறியும் போதெல்லாம் அந்த ஆண்டவன் மனக்கண்ணில் தோன்றித் தோன்றி மறைகின்றாரே!

என்றாலும் நண்பா—

இன்று அண்ணனுக்கு 60ம் ஆண்டு நிறைவுவிழா. பட்டிதொட்டி எங்கும் பரவலாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

மணிவிழா கண்ட மகிழ்வில், 'சார்புறத் தழுவிக் கொள்ளும் அந்தக் காட்சியினைக் கற்பனையில் வடித்துப் பார்க்கிறேன். அவ்வளவுதான் முடிகிறது! எல்லாம் கற்பனை! எல்லாமே ஏமாற்றம்!

கற்பனையிலேயே காலத்தைக் கழித்துவிட முடியாது என்பதையும் உணர முடிகிறது—என்றாலும், உன்னாலும்! யதார்த்த உலகுக்குத் திரும்பித்தான் வர வேண்டும்! வந்துதான் தீரவேண்டும்.

1968ம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் வந்த அண்ணனின் பிறந்த நாளில்—அண்ணன் அமெரிக்காவில் இருந்தார்! நம் இதயங்கள் துடிதுடித்துக் கொண்டிருந்தன!

1969-ம் ஆண்டு ஏன் பிறந்ததோ! எதற்குப் பிறந்ததோ? இந்த ஆண்டு பிறந்த நாளில் இதயங்கள் துடிதுடித்து, ஓய்ந்து மட்டுமல்ல, உடைந்தும் போய் விட்டிருக்கின்றன!

உடைந்த இதயத்தோடு, ஒழுகிய உணர்வோடு இன்று விழாவெடுக்கிறோம். மகிழ்வுடன் எடுக்க வேண்டிய விழாவை, கவலையுடன் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

என்றாலும் அண்ணனுக்கு விழாவெடுக்கிறோம். விழா மேடை கூட்டி விண்ணதிர முழங்கும் அந்த குறுகிய நேரத்திலாவது, நம்மையும் நிலையையும் மறந்து அண்ணனை நினைகிறோம்! வாழ்த்துகிறோம்! வழிபடுகிறோம்!

புரட்சி மலிந்த ஒரு வரலாற்றையும் படைத்து, அந்த வரலாற்றேட்டில் தன்னையும் ஒரு வரலாற்றுக் கதாநாயகனாக்கிக் கொண்டுவிட்ட அண்ணனை நினைவோம்! அவர்வழி நடப்போம்! கழகக் கட்டுக் கோப்பில்தான் அந்தவழி இருப்பதை உணர்வோம்!

அந்த உணர்வு ஒன்றின்மூலமே எதிர்காலத்துக்கு நம்மை நாம் எடுத்துக்காட்டாக்கிக் கொள்வோம்.

வாழ்க அண்ணா!
வளர்க அவர்தம் அரசு!!

அன்புள்ள,

**திருவாரூர் முத்துராமன்**

# தம்பி

நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்திக்கிறோம்!
எத்தனை எத்தனை நாட்களாகிவிட்டன, நாம் உரையாடி!!
என்ன இருந்தாலும் இப்படியா ஒரே அடியாக வாய்மூடிக் கிடப்பது!
மறந்தேவிட்டீர் என்றல்லவா எண்ணிக்கொண்டேன்!
இப்போதாவது இப்படி ஒரு கடமை இருப்பது நினைவிற்கு வந்ததே!!

இவ்விதமும், இதற்கு மேலும் பலப்பல கூறிட எண்ணுகிறாய் — நானறிகிறேன் — ஆனால் அடுத்தகணமே, உனக்கு ஒரு புன்னகை மலர்ந்திடுகிறது, நான் காண்கிறேன்! பாவம், நமது அண்ணன் மீது தவறு இல்லை. அந்த அளவுக்குக் கடுமையாக உழைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது — அந்தக் காரியத்தைச் செம்மையாகச் செய்து தீரவேண்டுமல்லவா, அதனாலேதான், கிழமைதோறும் நம்மிடம் பேசி மகிழும் வாய்ப்பையும் இழந்து நின்றிட நேரிட்டது என்று தம்பி, உன் மனமே எடுத்துக் கூறுகிறது, முகம் மலருகிறது! ஆனால் உண்மையில், அது சமாதானமல்ல — இத்தனை கிழமைகளாக, இந்தக் காரணம் காட்டி, சந்திக்காமலிருப்பது, முறையே அல்ல! வேலை, ஆயிரம் இருக்கட்டும்! உழைப்பு கடுமையாகத்தான் ஏற்படட்டும்! அதற்காக, அன்புடன் உரையாடும் வாய்ப்பைக்கூடவா ஒதுக்கித் தள்ளிவிடுவது! அஃது எங்ஙனம் சரியாகும்! சரியல்ல! முறையல்ல! நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்!!


அவ்விதமானால், அண்ணா! நீ, என்னதான் சமாதானம் கூறப்போகிறாய், நாம் இத்தனை கிழமைகளாகச் சந்திக்காததற்குக் காரணம் என்ன காட்டப்போகிறாய்? என்று கேட்கிறாயா, தம்பி! கேள்!!

தம்பி! நாம், இத்தனை கிழமைகளாகச் சந்திக்காததற்குக் காரணமல்லவா கேட்கிறாய்! நாம் சந்திக்காதிருந்தால்தானே, காரணம் காட்டவேண்டும்! நான் எங்கே உன்னைக் காணாமல் இருந்தேன்! ஒவ்வொரு நாளும் [illegible] உன்னைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துக் கிடந்தேனே! ஒவ்வொரு புன்னகையிலும் [illegible]லும் வியர்வைத் துளியிலும் வீர முழக்கத்திலும், வாழ்த்தொலியிலும், [illegible]லும், நான் உன்னைத்தானே கண்டேன்!! நான் எப்போது உன்னைக் காணாதிருந்தேன், காணாததற்குக் காரணம் காட்ட!

எண்ணங்களை எழுதிக்காட்ட இயலவில்லையே தவிர, நான் எந்தக் கணமும் உன்னைக்குறித்து எண்ணாமலிருந்ததில்லையே! வேறு என்னதான் இருக்கிறது, எனக்கு எண்ணி எண்ணிப் பெருமைப்பட, பூரிப்படைய! எப்போதும், உன் நினைப்புதான்! எந்த இடத்திலும் உன்னைத்தான் கண்டேன்!,

காடு கரம்புகளிலே சுற்றியபோதும், கழனி வெளிகளில் நடந்த நேரத்திலும், ஏரிக் கரைகளில் நடந்தபோதும், உன்னைத் தாண்டிச் சென்ற சமயத்திலும், பட்டி தொட்டி

## படமும் பாடமும் (1)



களிலேயும் சாலை சோலைகளிலேயும் உலாவியபோதும், பாட்டியிடமும் பெரியவரிடமும், துள்ளி விளையாடும் பிள்ளைப் பருவத்தினரிடமும், அரும்பு மீசை வாலிபரிடமும் நான் உற்சாகத்தைக் கண்டபோதும், உன்னைத் தானே சந்தித்தேன்!! எனவேதான், நீண்ட நாட்களாக நாம் சந்தித்தோமில்லை என்ற பேச்சே எழவில்லை; ஆகவே அதற்குக் காரணம் தேடிடவும் தேவை ஏற்படவில்லை! நாம், சிலபல நாட்களாக, சந்திப்பதையும் உரையாடி மகிழ்வதையும், வழக்கமான முறையிலே அல்ல புதியதோர் முறையிலே நடத்திக் கொண்டிருந்தோம். அந்தக் கட்டம் முடிவுற்றது. இனி நமது, பழையமுறை, துவக்கப்படுகிறது!!

அப்பப்பா! இந்த இரு திங்களுக்கு மேலாக, நாம் எத்துணை எத்துணை கடுமையாக உழைத்திடவேண்டி நேரிட்டது; என்னென்ன விதமான தொல்லைகளையும் துயரங்களையும், இன்னல்களையும் எதிர்ப்புகளையும் காணவேண்டி வந்தது; புதியதோர் பொறுப்பை ஏற்றுக்கொண்டோம், அதனைத் திறம்பட நடாத்திக்காட்டியாகவேண்டுமே என்ற கடமை உணர்ச்சி, நம்மை எல்லாம் கடுமையாக உழைக்கச் செய்தது; எரிதழலில் தள்ளிவிட்டோம், இனி இதுகள சாம்பலாகிப் போகும் காணீர்! என்று கருதினர்; தழல் பெரிது, கொடிது! எனினும் கழகம், குப்பை கூளமல்ல, குச்சிலோரல்ல, சாம்பலாகிப்போக! புடம்போட்டு எடுக்கப்பட்ட தங்கம் என்பார்களே அதுபோல, வெந்தழலில் கிடந்தது; தழல் அணைந்தது, தங்கம் கருகுமா; கழகம் இன்று தணலிலிட்ட தங்கமாகி நிற்கிறது! ஆனால் தம்பி இந்த அரும் நிலைமையை அடைவதற்கு முன்பு, தணலிற் தள்ளப்பட்டுக்கிடந்த நாட்களிலே எத்துணை எத்துணை தவிப்பு! இவ்வளவையும், நம்மால் தாங்கிக் கொள்ள முடிந்ததே என்பதை, இப்போது எண்ணிக் கொள்ளும்போது, களத்திலே பெற்ற 'வடு' மீது காதலியின் கூந்தலிலே செருகப்பட்டுள்ள முல்லை பட்டால் என்னவிதமான களிப்பு ஏற்படுமோ, அதுபோலல்லவா இருக்கிறது.

நான் தம்பி, நமது கழகத்தின் வலிவு பற்றியும், தாங்கிக்கொள்ளும் சக்தி குறித்தும், எப்போதுமே நம்பிக்கையற்று இருந்ததில்லை, எனினும் தேர்தலில் நாம் ஈடுபடுகிறோம் என்ற நிலை உருவானதும், பீறிட்டுக் கிளம்பிய பேய்க்காற்றைக் கண்டபோது சிறிதளவு, நானே கலங்கிப்போனேன், கழகம் தாங்கிக்கொள்ளுமா என்பது குறித்து!! கரடி, கால்களைப் பிடித்து இறுக்கிட, மலைப்பாம்பு மரத்திலே சுற்றிக்கிடந்த நிலையில், வாய் திறந்து கழுத்தருகே அசைந்தாட, கரும்புலி மேலே பாய, தொலைவிலிருந்து செந்நாய்கள் சீறிட, புதரருகே நின்றபடி நரிக்கூட்டம், இரத்தம் குடித்திடச் சமயம் பார்த்திருக்க, கழுகுகள் மேலே வட்டமிட்டபடி இருக்க வளைந்த வாளைக் கரத்திலே ஏந்திய ஓர் வீரன், இந்நிலையினின்றும், தன்னை விடுவித்துக்கொள்ளப் போரிடும் காட்சியை மனக்கண்ணாலே பார் தம்பி! அதுபோலல்லவா, தேர்தல் களத்திலே நமது நிலைமையிருந்தது!! எப்படிச் சமாளித்தோம்!! எங்ஙனம் தாங்கிக்கொள்ள முடிந்தது!! எங்கிருந்து பெற்றோம், இத்துணை பயங்கர எதிர்ப்புகளையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலை! எனக்கு வியப்புதான்! அதனாலேதான், இந்தத் தேர்தலில், நமக்கு வேதனை தரும் தோல்விகள் பல ஏற்பட்ட போதிலும், கழகத்தைப் பற்றிய நமது மதிப்பு உயர்ந்திருக்கிறது; கலக்கமடையவோ, மனம் உடைந்திடும் நிலைபெறவோ தேவையில்லை, என்று கூறிட முடிகிறது.

மண்ணைக் கவ்விஞர்கள்!

டிபாசிட் இழந்தார்கள்!
படுதோல்வி அடைந்தார்கள்!
பத்திலோர் பாகம்தான் கிடைத்தது!

என்று கொட்டை எழுத்துக்களில் நம்மைக் குறித்து, எழுதுகிறார்கள் பார்க்கிறோம்—ஆனால் பதைக்கவில்லை —பீதி அடையவில்லை—ஏன்?

ஏன்? என்பதற்கு, மாற்றார்கள் விடைகாண முயலுகிறார்கள் முடியவில்லை!!

தம்பி! உன் ஆற்றலையும், தாங்கிக்கொள்ளும் சக்தியையும் அவர்களால் கணக்கெடுக்கத் தெரியவில்லை, எனவேதான், அவர்கள் பல இடங்களிலே இந்தப் பயல்கள் படுதோல்வி அடைந்தும், மண்ணைக் கவ்வியும், துளிகூட துக்கம் துளைத்திடும் நிலை பெறாமல், எப்போதும்போல 'எக்காளமிட்டபடி இருக்கிறார்களே —ஏன்? ஏன்? என்று கேட்டுக் கேட்டுக் கலக்கமடைகிறார்கள்.

வேதனை தரும் தோல்விகள்
வெட்கப்படத்தக்க தோல்விகள்
எரிச்சலூட்டும் ஏமாற்றங்கள்
நம்பி மோசம்போன இடங்கள்

இப்படிப் பலப்பல கண்டோம்! இவைகளை கேலி செய்வதற்காக, கேவலப் படுத்துவதற்காக, இழித்தும் பழித்தும் பேசுவதற்காக மற்றவர்கள் கூவிக்கூவிக் காட்டுகிறார்கள்! அவர்கள் எந்த நோக்கத்துடன், அவ்விதம் செய்வதாயினும் பரவாயில்லை, விடாமல் அவர்கள் அவ்விதம் குத்திக் குத்திக் காட்டவேண்டுமென்று நான் பணிவன்புடன் வேண்டி வேண்டிக் கேட்டுக்கொள்ளுவேன்!! தம்பி! உன் அரிய உழைப்புக்குப் பிறகும், அற்புதமான ஆற்றலுக்குப் பிறகும், உயரிய பணிக்குப் பிறகும் தூய தொண்டுக்குப் பிறகும் நாம் பல இடங்களில்,

டிபாசிட் இழந்தோம்
படுதோல்வி அடைந்தோம்

என்ற உண்மையை நாம், எக்காரணம் கொண்டும் மறந்திடக் கூடாது! நமது நெஞ்சிலே பாய்ச்சப்படும் இந்த உண்மை, வேதனையையும் வெட்கத்தையும் தருகிறது என்பதற்காக, நாம் இதனை வீசுவோர் மீது சினம்கொள்வது கூடாது—நான் சீலம் போதிக்கிறேன் என்று கேலிபேசாதே, தம்பி! அவர்கள் இத்தக் கணைகளை நம்மீது ஏவியபடி இருந்தால்தான், நாம் நமது நிலைமையைத் திருத்திக்கொண்டாக வேண்டும் என்ற உள்ளத் தெளிவினைப் பெறமுடியும்!

எவ்வளவு பாடுபட்டோம், எத்துணை உழைப்பை அளித்தோம், மக்களிடம் எவ்வளவு கனிவுரை கூறி ஆதரவு கேட்டோம். எனினும்,

பல இடங்களில் படுதோல்வி அடைந்தோம்.
பல இடங்களில் டிபாசிட் இழந்தோம்

என்பதை மறவாதிருப்பதுதான் இனி இத்தகைய வேதனைதரும் தோல்விகளும், எரிச்சலூட்டும் ஏமாற்றங்களும் நமைத்தாக்காது இருக்க, நாம் என்ன முறையில் நடந்துகொள்ளவேண்டும், நமது முறைகளில் எதனை எவ்விதம் திருத்திக்கொள்ளவேண்டும், மக்களின் பேராதரவைப் பெறுவதற்காக மேலும் எம்முறையிலே பணியாற்றவேண்டும் என்பனவற்றினை ஆய்ந்தறிந்து செயலில் ஈடுபடவைக்கும். இந்தப் பேருதவி

ளையத்தான் நம்மைத் தூற்றுவோர் புரிகிருர்கள்! முன்னமோர் முறை, வாழ்க வசவாளர்கள்! என்று நான் எழுதியது நினைவிலே இருக்கிறதல்லவா! பொருளும் புரியுமே இப்போது.

கோபக்கனலை உமிழ்ந்திடும் குணாளர்களே தூற்றலைத் தொண்டாக்கிக்கொண்ட தூயவர்களே! இழிமொழி பொழிந்து இன்பம் காணும் பெரியீர்! தூற்றுங்கள்! தூற்றுங்கள்! தூ! தூ! என்று நாள் தவருமல் நாக்கு வறண்டிடு மட்டும் தூற்றிக்கொண்டே இருங்கள். கைகொட்டிச் சிரியுங்கள்! கெக்கலிசெய்யுங்கள்!

டிபாசிட்டு இழந்தனர்
படுதோல்வி அடைந்தனர்

என்பதைப் பன்னிப் பன்னிக் கூறுங்கள்—பதைக்கப் பதைக்கப் பேசுங்கள்!! ஆமாம், அன்பர்காள்! இந்தக் காரியத்தில் அகில முழுவதும் ஆசானுகத் தக்க அளவுக்கு ஆற்றலைப் பெற்று விளங்கிடும் அரசர்க்கரசர்காள்! அயர்ந்து போகாமல் இந்த நாராசத்தை எடுத்தெடுத்து வீசுங்கள்! அப்போதுதான், எமக்கு,

சூடும்
சுறுசுறுப்பும்
சூழ்நிலை விளக்கமும்
செயல்படு முறையும்
தரமும் திறமும்
வழியும் வகையும்

நிரம்ப நிரம்பக் கிடைக்கும்—கிடைக்கப் பெற்றுல்தான் இன்றைய பதினைந்து, நாளை ஐம்பதாகும் அறுபதாகும், வேதனை தரும் தோல்விகள் விரண்டோடும் செந்தேனென இனிக்கும் வெற்றிச் செய்திகள் விருந்தாகக் கிடைக்கும், எனவே ஏசலை ஏவிப் பூசலை எதிர்பார்க்கும் இணையற்ற வீரர்காள்! நித்த நித்தம் தூற்றுங்கள், நிரம்ப நிரம்ப ஏசுங்கள், எம்மிலே, செயலற்றுக் கிடப்பவனும் துடித்தெழுந்து செயலாற்றும் செம்மலாக, உதவுங்கள்.

தம்பி! இந்தத் தேர்தலில் நாம் வேதனைப்படத்தக்க தோல்விகளைப் பெற்ருேமே, அவை, நம்மை கவலைக் கடலிலே ஆழ்த்திவிட்டிருக்கும், கரை காணுமலும், உயிர்த்தெழ இயலாமலும் நாம் அதிலே அமிழ்ந்து போயிருப்போம், நமக்கென்றே தமிழகத்தில் தனிச் சிறப்புடன் அரசோச்சி வருகின்ற வசவாளர்கள் மட்டும், கிளம்பி, வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சாதிருந்தால்! அவர் தம் இழிமொழிதான், நம்மை சோகக் கடலிலே ஆழ்ந்து போவதினின்றும் தப்பவைக்கிறது—அந்தோ! அயராது உழைத்த எமக்கு, அருந்தொண்டாற்றும் எமக்கு, தூயதோர் பணியிலே ஈடுபட்டுள்ள எமக்கு. தாய்த் திரு நாட்டின் மீது பூட்டப்பட்டுள்ள தளைகளை நொறுக்கி எறிந்து. தன்னரசு காண வேண்டுமென்று தளராது உழைக்கும் எமக்கு, மக்கள் தம் ஆதரவு இன்னமும் கிடைக்கவில்லையே தோல்வியன்ருே துரத்தி வந்து தாக்கிற்று, நமது விளக்கமும் வேண்டுகோளும், தெளிவாக இல்லையோ நமது பணியின் மாண்பு மேலும் பண்பு பெறவேண்டுமோ, மக்களை அணுகி அளவளாவுவதிலே நாம் எடுத்துக் கொண்ட முயற்சி போதாதோ காரணம் யாதோ, நம்மை சிலபல இடங்களிலே வெற்றிபெற ஒட்டாது செய்துவிட்டனரே, நம்மைக் கெடுத்தாலும் பரவாயில்லை, அங்ஙனம் செய்வதன் மூலம், நாம் எந்த இலட்சியத்தைப் பரப்புகிருேமோ, அந்த இலட்சியத்துக்கு ஒரு இழிவும் இன்னலும் ஏற்பட்டுவிடுமோ, இனி அதுபோன்றதோர் இடையூறு நேரிடாதிருக்க, நாம் எந்த வெற்றிக்கான வகையில் நமது முறைகளைத் திருத்தி அமைக்க வேண்டும், ஆற்றலைப் பெருக்கிக் கொள்ளவேண்டும் கூட்டுச் சக்தியைத் தேடிப்பெற வேண்டும், மக்களிடம் உள்ள தொடர்பு மேலும் கனிவுள்ளதாகிட வழிகோல வேண்டும்—என்ற இன்னோரன்ன பிற எண்ணங்களை நாம் பெறவும், பெறுவதன் மூலம் எதிர்கால வெற்றிகளுக்கான அச்சாரம் காணவும், இழிவினைப் பழியினை, இல்லாததை இட்டுக்கட்டியதை, எரிச்சலை குமுறலை. காய்ச்சலை கசப்பை; பொல்லாங்கை பொச்சரிப்பை, நச்சு நினைப்புகளை நாசக் கருத்துகளை, வாரி வாரி வீசிடும் உத்தமர்களல்லவா, உதவுகிருர்கள்! வாழ்த்திடத் தவறலாமா!! அதனுல்தான், தம்பி, மீண்டும் அவர்களை எண்ணி, நெஞ்சு நிறைந்த மகிழ்ச்சியுடன

வாழ்க வசவாளர்!

என்று வாழ்த்துகிறேன்! சோகம் கப்பிக்கொண்ட நம் உள்ளத்துக் கெல்லாம், சுறுசுறுப்பும் விறு விறுப்பும் சுரந்திடச் செய்யும், சுடுசொல் வீசி, நம்மை எழச் செய்கிருர்கள்!! எழுந்து நின்று, துக்கத் திரையை நீக்கியபடி, சூழ்நிலையை மீண்டும், பார்க்கிருேம். ஆங்காங்கு தாரகைகள் மின்னிடத்தான் செய்கின்றன! வெற்றிக் கதிரொளியும் தெரியத்தான் செய்கின்றது! பெருமைப்படவும் பேசிப் பேசி மகிழவும் தக்க சீரிய வெற்றிகள் சிற்சில கிடைத்துத்தான் இருக்கின்றன! பாலைவனம் என்றெண்ணிப் பதைக்கிருேம், நீரோடைகள் நிரம்பித்தான் உள்ளன!! வேதனைப்படத்தக்க தோல்விகளை நாம் கண்டு கவலைப்படத்தான் செய்கிருேம். ஆனுல் அதேபோது, உற்றுப் பார்க்கும்போது, கைகளைப் பிசைந்து கொண்டும் கண்களைக் கசக்கிக் கொண்டும், முணுமுணுத்துக் கொண்டும், சபித்துக் கொண்டும் நிற்கும் அன்பழிக்கும் அருங் குணத்தார்களைக் காண்கிருேம், காரணம் என்ன என்று கேட்கிருேம், அவர்கள்

ஆயாசப்படத்தக்க
அச்சப்படத்தக்க
ஐய்யோ! அம்மா! என்று அரற்றிடத் தக்க!
அவனு! அவனு! அவனு! என்று கொதித்துக் கூவிடத்தக்க வெற்றிகளையும்

பெற்றிருக்கிருேம்!! என்பது புரிகிறது!!

அந்த வெற்றிகளால் நாம் அடக்கமுடியாத நம்பிக்கைப் போதை கொள்ளாது தடுத்திட, வேதனை தரும் தோல்விகளும், அவை தமைக் குறித்து வீசப்படும், வெந்தழலினும் கொடிய வசைமொழிகளும், பயன்படுகின்றன; அதுபோன்றே நாம் அடைந்த தோல்விகள் நம்மைத் துளைத்துத் துளைத்து செயலற்றவர்களாக்கிடும்போது, பெற்ற ஒரு சில வெற்றிகள், பளிச்சிட்டுக் காட்டி நம்மை, பாதையை மறவாதீர்! பணி புரியத் தவருதீர்! சோகக் கடலில் ஆழ்ந்திடாதீர்! சொல்லம்பு கண்டு நிலை குலையாதீர்! வெற்றி இதோ காணீர்! வேதனையைத் துடைத்துக்கொண்டு, புதிய வேகத்துடன் பணியாற்றி. மேலும் பலப் பல வெற்றிகள், வேதனையைத் துடைத்திடத்தக்க வெற்றிகளைப் பெற வாரீர்! என்று அழைத்திடக் காண்கிருேம் — தன்னடக்கமும் பெறுகிருேம், தன்னம்பிக்கையையும் மீட்டுக் கொள்கிருேம், தம்பி! இதுதான், இன்று நமது நிலைமை!! சிந்தித்துப் பார், சிறிதளவு உன்னிப்பாக — பிறகு, மீண்டும் ஓர்



# "அண்ணா அறுபது"

தென்னாட்டின் பேரறிஞர் அண்ணா; இன்பத்
திருநாட்டின் இங்கர்சால்; கல்விச் செல்வர்;
பன்னாட்டின் அறிவுலக மேதை; கற்றும்
பயன்கருதார்; சொற்பெருக்கு: தமிழின் ஊற்று
இந்நாட்டின் எழுத்துலக சிற்பி; முற்றும்
இருந்திசைக்க முடியாத குயில்தான்; வாழ்வை
தன்னாட்டின் தொண்டிற்கே அற்ப ணித்த
தனிவள்ளல் இத்தோடு அண்ணா பத்து,
காட்சிக்கே எளியர்;நற் கருத்தில் வல்லா
கனிதமிழில் கைவந்த கலைஞர்; பல்லோர்
மாட்சிக்கு மதிப்பளிக்கும் மனிதர்; தோன்றும்
மடமைக்குப் போராடு வார்;அ டுக்குப்
பேச்சுக்கோர் அண்ணாதான்; பெருமை கொள்ளார்;
பெருந்தலைவர் போற்றுகின்ற பெருமை மிக்கார்;
ஆட்சிக்கு வந்தமுதல் அமைச்சர்; மாற்று
அரசுக்குப் புகழ்தந்தார்; ஆக பத்து.
உள்ளத்தே அன்புடையார்; உவமைத் தேனீ!
உலகத்தார் போற்றுகின்ற பண்பார் நெஞ்சம்;
கள்ளத்தேன் உண்ணாத களிகொள் வண்டு;
கடமைக்குத் தலைவணங்கும் வீரர்; மக்கள்
வெள்ளத்தைத் தனதாக்கிக் கொண்டார்; நாட்டு
வீணைக்கு நரம்பானார்; பொறுமை முந்நீர்
பள்ளத்துக் கடல்தந்த முத்து; வாழ்க்கைப்
பாதைக்கே ஒளியானார்; பத்தாம் மூன்று,
தமிழ்தந்த சீராளன்; தகைமை பூண்டோன்;
தன்னலத்தைக் காணாதான்; 'அண்ணா' என்னும்
குமிழ்கின்ற பேராளன்; குழந்தை யுள்ளம்;
கொடுக்கின்ற தலைப்புக்குப் பேசும் வல்லோன்;
உமிழ்கின்ற சொல்லேரின் உழவன்; ஏழை
உள்ளத்துள் எல்லாமே உள்ளோன்; நெஞ்சம்
கமழ்கின்ற பகுத்தறிவு வாதி; துன்பால்
கலங்காத உளத்தோடு நாற்ப தாகும்.
இசைமணக்கும் பெருந்தலைவன்; 'காஞ்சி' தந்த
எழிலரசன்; தமிழர்களின் இதயக் கோவில்;
மிசைமணக்கும் ஒருதெய்வம்; தமிழ கத்தின்
மீகாமன்; கலையுலக மின்னல்; சொல்லின்
அசைமணக்கும் தமிழ்ப்பாதான்; தமிழன் சொத்து;
அலைபுரண்டு வந்தமொழி இந்திப் பேயை
கசைமணக்க வைத்ததமிழ்க் காவ லன்தான்;
கண்மணிதான்; சுடர்விளக்கோ(டு) ஐம்ப தாகும்.
சினந்தழுவா சிறப்புடையோன்; சிகரம் போன்றோன்;
சிந்தனைக்கு விருந்தளிப்போன்; சிறப்பு பெற்றோன்;
வனந்தழுவா நெருக்கத்தின் கூட்டத் தோடு
வையத்தின் யாத்திரையை முடித்துக் கொண்டோன்;
மனந்தழுவா மாணிக்க மல்ல; 'அண்ணா'
மலையில்பட் டம்பெற்றோன்; மக்க ளோடு
தினந்தழுவா தவனல்லன்; தியாக சீலன்
தெய்வத்தின் பிறப்பாக அறுப தானான்!

—நாகமங்கலம் தமிழ்நாடன்.

முறை படித்ததைத் திரும்பப் படித்துப் பார், பட்டமும் தெரியும் பாடமும் கிடைக்கும்!!

நூறு இடங்களுக்கு மேல் தேர்தலில் போட்டியிட்ட 'இதுகள்' கேவலம் பதினைந்து இடங்களிலே தான் வெற்றிபெற முடிந்தது, என்று பேசுகிறார்களல்லவா, தம்பி அவர்களை, நான் மூன்று வகையினராகக் காண்கிறேன்.

1. அதனையும் செய்ய இயலாதார்!
2. அதைக் கண்டே அச்சம் கொண்டார்
3. அது நமக்குப் போதுமே என்று அங்கலாய்ப்போர்!

அண்ணா! இப்படி ஏன் சுற்றி வளைத்துப் பேசுகிறாய். சுருக்கமாக இன்னின்ன கட்சிகள் என்றுதான் கூறி விடேன், என்று கேட்கிறாய். தம்பி தெரிகிறது. நீயே தான் அந்த வேலையைச் செய்துவிடேன்!

காங்கிரஸ் கட்சி, நம்மைவிட அதிகமான இடங்களிலே தேர்தலில் ஈடுபட்டது. பெருவாரியான இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறது. முறையும் நெறியும், பிறகு கவனிப்போம்—வெற்றி பெற்றிருக்கிறது—எனினும் மிக மிகக் குறைந்த அளவு இடங்களையே பெற முடிந்த. நம்மிடம் அந்தப் பெரிய கட்சி, அலட்சியமாகவா நடந்துகொண்டது!! ஊர் உலகம் அறியுமே, நம்மை வீழ்த்த, காந்தியாரின் கண்ணீரைப் பன்னீராக்கிக் குளித்து மகிழ்ந்திடும், அந்தக் கட்சி, எவ்வளவு உழைத்தது, உழன்றது, ஊரை அடித்து உலையில் போடுபவனுடைய கரத்தைப் பிடித்துக்கொண்டு, இது கையல்ல...என்று என்னென்ன சொல்லி, கெஞ்சிக் கூத்தாடிற்று எவ்வளவு எவ்வளவு கொட்டிற்று என்பதனை எல்லாம் அறியாதார் யார்?

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு போதுமல்லவா? பதம் பார்க்க! இதோ, பார்!!

சாத்தூர் தொகுதியில் தேர்தலுக்கு நின்றார் முதலமைச்சராக இருக்கும் காமராஜர்! அந்த முலாம் கலையாதிருக்கும், நிலையுடன்!!

காமராஜருக்கு, பெரியாரின் பேராதரவு எனும் புதிய கவசமும் கிடைத்தது!

ஆச்சாரியாரை வீழ்த்தியவர் என்ற 'விருது' வேறு அவருக்கு ஏற்கனவே இருக்கிறது.

தேர்தல் காரியத்திலே 'அசகாயச் சூரர்' என்று புகழ் சூட்டப்பட்டவர்.

களத்திலே ஈடுபடு முன்பே உழைப்பாளர்கட்சியை ஒழித்துக் கட்டியதன் மூலம், ஒரு பலமான எதிரியைப் பக்குவமாகத் தன் முகாமுக்கு இழுத்துக் கொண்டவர்.

இவ்வளவு ஆற்றலுள்ளவர் காமராஜர் — தேர்தலுக்கு நின்ற இடமோ, சொந்தத் தொகுதி!

எதிர்த்து நின்றாரே, ஜெயராம ரெட்டியார், அவரை தம்பி உனக்குத் தெரியுமா? ஊராரைக் கேட்டுப் பார், தெரியுமா என்று?

ஜெயராம ரெட்டியாரின் அறிவாற்றல், தேசத் தொண்டு, தகுதி திறமை, நேர்மை நாணயம் ஆகியவை பற்றி, இந்துவோ மித்திரனோ, தினமணியோ கல்கியோ விகடனோ வேறு இதழ்களோ, எழுதிப் படித்ததுண்டா —நீயோ, நாடோ? இல்லை!

அவருடைய படங்களைப் பத்திரிகைகள் வெளியிட்டனவோ? இல்லை!

அவர்தான், ஊரறிந்த உலகறிந்த, முதலமைச்ச

ராகவும் பெரியாரின் பேரன்பராகவும் கொலுவீற்றிருக்கிற காமராஜருக்குப் போட்டி!!

டிபாசிட் கிடைக்கலாமா? இப்படிப்பட்ட, அசகாயச் சூரரை எதிர்க்கிறவருக்கு!!

தலைமுறை தலைமுறையாகத் தமிழர்கள், காமராஜரைப் பூஜை செய்யவேண்டும் என்று, பூஜா முறைகளே புரட்டு என்று ஐம்பதாண்டுகளாகப் போதித்து வரும் பெரியாரே பேசுகிறார், அப்படிப்பட்ட தமிழரின் பாதுகாவலர் தேர்தலுக்கு நிற்கும் போது, யார், எவர் என்று ஊரார் ஆவலுடன் கேட்டுக் கேட்டு விவரம் கிடைக்கப் பெறாமல் திண்டாடும் நிலையில், ஒருவர் போட்டியிடுகிறார், அவரை வாழ்த்திய விருதுநகரார், பெற்ற அதிக ஓட்டுகள் எத்தனை? தம்பி! சாத்தூரில், காமராஜர் போட்டியிட்டாரே, நமக்குத்தான காமராஜரை கவிழ்ப்பதுதான் வேலை என்ற அரசியல் இரகசியத்தை பெரியார் தமது முழு ஆற்றலையும் கொண்டு கண்டுபிடித்து, உலகம் உய்யட்டும் என்ற உயர்ந்த நோக்குடன் இந்த உண்மையை நாளைக்குப் பத்து கூட்டங்கள் மூலம் எடுத்துரைத்து வந்தாரே, — அவருடைய அபூர்வ கண்டுபிடிப்பு உண்மை என்றால், நாம், சாத்தூர் சென்று, காமராஜருக்கு ஓட்டுப் போடாதீர்கள் என்று பேசியிருக்க வேண்டுமல்லவா?

நானோ ஆசைத் தம்பியோ, அன்பழகனோ சம்பத்தோ, கருணாநிதியோ கண்ணதாசனோ, சிற்றரசோ சண்முகமோ, சத்தியவாணியோ நடராசனோ; யாராவது சாத்தூர் சென்றோமா? சென்று, ரெட்டியார் நல்லவரோ கெட்டவரோ அது ஒருபுறம் கிடக்கட்டும்,

சங்கரலிங்கனாரைச் சாகடித்தவருக்கு

சென்னைக்குத் தமிழ்நாடு என்ற பெயர் வைக்காதவருக்கு

தேவிகுளம் பீர்மேடு பறிகொடுத்தவருக்கு
ஓட்டுப் போடாதீர்கள்!

என்று பேசி இருக்கக் கூடாதா? நமது பிரச்சாரம் அங்கும் மும்முரமாகி இருந்தால், காமராஜரின் வெற்றிக்கு ஆபத்து ஏற்பட்டிருக்காதா? நெஞ்சில் கை வைத்து சொல்லச் சொல்லுங்கள்—நெஞ்சில் நேர்மைக்கு இடம் தருபவர்களை? அரசியல் நாகரிகம், நம்மை சாத்தூர் பக்கம் போகவிடாமல் தடுத்தது! ஆனால் அவர்? ஆழம் தெரியாமல் காலைவிடுகிறார்கள்—அகப்பட்டுக் கொண்டு விழிக்கப் போகிறார்கள் என்று அரசியல் பேசுகிறாரே அந்தக் காமராஜர் 100க்கு 15 என்ற கேலிக்கு இலக்காகி உள்ள நாம் தேர்தலில் ஈடுபட்டபோது,

வராத இடம் உண்டா?
வரிந்து கட்டாத நாள் உண்டா?
பம்பரம்போல் சுழன்றாடவில்லையா?

இப்போது மூன்று வகையினர் குறித்து நான் குறிப்பிட்டிருக்கிறேனே, அதிலே இரண்டாவது வகை, யார் என்று யோசித்துப்பாரேன்! புரிகிறது!! அது போன்றே, மற்ற இரண்டு குறித்தும், சிந்தித்துப் பார், படமும் தெரியும் பாடமும் கிடைக்கும்.

அண்ணன்,

அண்ணாதுரை

(31—3—57 திராவிட நாடு இதழில்)

# பழைய நினைவு!

எழில் மிகுந்த இளமரக்காவின் குளிர் நிழலில் அமர்ந்துகொண்டு சுவைத்துக்கொண்டிருந்த குயிலோசை இப்போதும் கேட்கிறது; மாமரத்தின் கிளையிலிருந்து அல்ல; மனத்தின் அடித்தளத்திலிருந்து. அது பாட்டல்ல —பாட்டின் பழைய நினைவு என்கிறார்கள் பலர். எனக்கொன்றும் அது புரியவில்லை. மாமரத்தின் கிளையிலிருந்து பாட்டு செவிகளில் பாய்ந்தபோதும் என்மனம் மயங்கியது; உணர்வுகள் சிலிர்த்தன. மனத்தின் அடித்தளத்திலிருந்து குயிலின் பாட்டு கேட்கிறபோதும் மனம் மயங்குகிறது; உணர்வுகள் சிலிர்க்கின்றன; கூடவே கண்களும் கசிகின்றன, அதுதான் பாட்டிற்கும் நினைவிற்கும் உள்ள வேறுபாடோ என்னவோ?

• • •

வெளுத்துவிட்ட கீழ்வானத்தைச் சிவப்பாக்கிக் கொண்டிருக்கும் இளம் கதிரவனைக் காண்கிறபோதும் குயிலின் நினைவுதான்; கூட்டம் கூட்டமாகக் கூட்டிற்குத் திரும்பும் பறவைகளைக் காணும் அந்தி நேரத்திலும் அதே நினைவுதான். இருள் செறிந்த நள்ளிரவின் அமைதியில் எங்கோ கதவு தட்டப்படுகின்ற ஒலி செவிகளில் விழுகிறபோது குயிற்பாட்டின் இனிமையில் மயங்கிக்கிடந்துவிட்டு காலந்தாழ்ந்து இல்லக் கதவினைத் தட்டிய நாட்கள் நினைவுக்கு வருகின்றன. இனி… …?

• • •

வாழத் தெரிந்த விலங்குகளிடமிருந்து தன்னைக் காத்து, வாழத்தெரியாத பறவைகளைப் பேணிவந்த குயில் —எல்லையற்ற விண்வெளியில் உரிமைக் குயிலாக இருந்து தங்கக் கூண்டில் சிறைக் குயிலாகி மறைந்தபோது இளமரக்காவும் எழில் மாளிகையும் வெறிச்சோடிவிட்டன. எங்கும் அமைதி… … …

• • •

ஒரே ஆரவாரம். வாழத்தெரியாத பறவைகளின் மெல்லிய குரல்கள், வலிய விலங்குகளின் காட்டுக்கூச்சலில் அடங்கிப் போய்விட்டன. பேரொலியும் புழுதியும் சூழ பரபரப்போடு ஓடிக்கொண்டிருந்த விலங்குகளைக் கண்டு ‘கிரீச்’சிட்ட பறவைகளின் ஒலிகள் விலங்குகளுக்கு வாழ்த்தாக அமைந்துவிட்டன. குயிலின் இனிய குரல் பலர்க்கு மறந்துவிட்டது.

• • •

ஆனால் எண்ணற்ற எளியவர்கள்—கன்னங்கரிய சின்னக்குயிலின் குரலுக்காக இன்னும் இங்கே ஏங்கிக் கொண்டே இருக்கிறார்கள்.

—சிவ. அம்பிகாபதி.

# ஆலமரத்தடி சாமியார்!

சிறுகதை

—ஜே. வி. நாதன்

அந்த ஊருக்கே ஒரு சிறப்பு அந்தப் பெரிய ஆலமரம்; அதன் நிழலில் வாடகையில்லாமல் வாசஞ் செய்வதற்காக திடீரென்று வந்த புது மனிதர்தான் அந்தச் சாமியார்!

ஊரே அவரிடம் மரியாதையும் பயபக்தியும் கொண்டுவிட்டது. காரணம், அவர் தேவாரத்தையும் திருவாசகத்தையும் நெக்குருகிக் கண்ணீர் வழியப் பாடி 'அவனில்' ஒன்றிவிடுவது மட்டுமல்ல; கிராமத்து மக்கள் தங்கள் கவலைகளை அவரிடம் முறையிடும்போது அறிவுபூர்வமான விளக்கம் கூறி நல்வழியைப் போதித்து 'இறைவனை நம்பு!' என்ற தத்துவ உண்மையை எடுத்துக் கூறிடுவதும் — குழந்தைகள் பேரில் சொல்லமாட்டாப் பிரியமும் பாசமும் கொண்டு அவர்களோடு தானும் குழந்தையாக மாறி விளையாடுவதும், அந்தச் சாமியார் மீது அந்த ஊர் மக்கள் அன்பு கொள்ளச் சரியான காரணங்கள்தாம்!

"அப்பா! சாமியார் தாத்தா இன்னிக்கு கதை சொன்னாரப்பா."

"கதையா?...என்ன கதை குமரா?" என்றார் புரொபசர்.

"மாம்பழத்துக்காக மயில் மேலே உலகத்தைச் சுற்றி வந்தாரே முருகக் கடவுள், அந்தக கதை அப்பா!"

"ஓ...!" வியப்போடு தலையாட்டினார்.

புதுப்பட்டியை அடுத்த நகரத்துக் காலேஜில் ஏதோ ஒரு துறையின் பேராசிரியராகப் பணிபுரியும் அவருக்கு அந்தக் கிராமத்தின் அமைதியும் அழகும் மிகவும் பிடித்துவிட்டதாலேயே அங்கே வசிக்கிறார் என்று ஊர் சனங்கள் கூறிக்கொண்டார்கள். தினமும் நான்கு மைல்களை பஸ்ஸில் கடந்து செல்வதை அவர் கௌரவக் குறைவாக எண்ணியதில்லை. அடக்கமும் எளிமையும் வாய்ந்த அவர் மீது அங்குள்ளவர்களுக்கு ஒரு மதிப்பு, மரியாதை!

அந்தப் பெரிய மாடி வீட்டில் புரொபசரும் அவருடைய எட்டு வயதுச் சிறுவன் குமரனும்தான் வசித்தார்கள். வேலைக்கார செல்லையா, சமையற்காரக் கிழவி—இவர்களும் இல்லாவிடில் அந்த வீடு 'வெறிச்' சென்று ஆகிவிடும்.

செல்லையாவுக்கு ஆலமரத்தடி சாமியார் மீது அபார பக்தி. இரவு நேரங்களில் சாமியாருடன் பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பான்.

"பாவமுங்க அந்தச் சாமி! எத்தினி பெரிய துக்கத்தை மனசுலே வைச்சுகினுருக்காரு அவரு......... பாவம்!" என்று செல்லையா பேச்சோடு பேச்சாக புரொபசரிடம் கூறியபோது ஆலமரத்தடி சாமியாரைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலும், அவரைச் சந்திக்க வேண்டும் போல மனத்தில் இனந்தெரியாதவொரு தவிப்பும் ஏற்பட்டன.

"அப்பா.........அப்பா! சாமியார் தாத்தா பட்டாளத்தில் சண்டை போட்ட வராம். சீனாக்காரன் மேலே குண்டு வீசினதைப் பத்தியெல்லாம் கதை கதையாச் சொல்றாருப்பா... அடேயப்பா! கேக்கறபோதே நமக்கு அந்தச் சீனாக்காரன் மேலே எத்தினி கோபம் வருது தெரியுமா?..." என்று வேகமாகப் பேசிக்கொண்டிருந்த குமரனின் குரல் திடீரென்று தழுதழுத்தது. "ஆனா...ஆனா..."—தயங்கினான் அவன்.

"என்ன குமரா? ஏன் நிறுத்திவிட்டாய்?...தேம்புகிறாய்?"

குமரன் கூறினான்:

"சாமியார் தாத்தா ரொம்பப் பாவம்பா. என்னைப் போலவே அவருக்கு ஒரு பேரன் இருக்கானாம். அந்தப் பேரன் எங்கேயிருக்கான்—எப்படியிருப்பான்னு அவருக்குத் தெரியாதாம்...சின்னக் குழந்தையா இருக்கற போதுகூட அவரு அவனைப் பாத்ததில்லையாம். அவனைத் தேடி ஊர் ஊராச் சுற்றிகிட்டே வந்தவருதான் நம்ம ஊருக்கு வந்து சேர்ந்திருக்கார். இனிமே தம் பேரனைக் கண்டுபிடிக்க முடியாதுங்கற அளவு அவரு மனசு சலிச்சுப் போச்சாம். எங்க எல்லாப் பிள்ளைகளையும் பாக்கறதே அவரோட பேரனைப் பாக்கறதுக்குச் சமம்னு சொல்லிகிட்டே அழுறார் அப்பா... த்சு!...த்சு! அந்தத் தாத்தா ரொம்பப் பாவம் இல்லையாப்பா?"

செல்லையா ஒருபுறமாய் நின்றிருந்தவன் முன்னே வந்தான்:

"ஆமாமுங்க ஐயா! அவர் வாழ்க்கையே ரொம்பப் பரிதாபமுங்க ராவுலே தூக்கம் வரலைன்னு ஆலமரத்தடி மேடையில் உக்காந்து காத்து வாங்கப் போவேனுங்களா. அந்தப் பொழுதிலே தாங்க அவர் எங்கிட்டே மனசு வுட்டுப் பேசுவார். காவி உடுத்தி, கழுத்திலே கொட்டை கட்டிகினு எல்லாத்தையும் துறந்தாப்போல இருந்தாலும் அவரு பாசத்தை மட்டும் இன்னும் துறந்துடலீங்க..." மேலே செல்லையா சாமியாரின் சோகக் கதையைக் கூறினான்.

கேட்டுக்கொண்டிருந்த புரொபசர் முகம் சுருங்கியது. கடைசியில் தன் உள்ளத்து உணர்ச்சிகளை — பரபரப்பைக் காட்டிக் கொள்ளாமலேயே "கதை ரொம்ப உருக்கமாத்தான் இருக்கிறது செல்லையா. அதிருக்கட்டும் அந்தச் சாமியார் எப்படி இருப்பார்னு சொல்லமுடியுமா?" என்று கேட்டார்.

"சாமியார் மிலிடெரியில் இருந்த ஆளுங்க. கட்டு மஸ்தான திரேகம் முகத்திலே கன்னத்துகிட்டே தழும்பு ஒண்ணு மட்டும் இல்லேன்னா அவரு பொலிவு வேற யாருக்குங்க வரும்?"

'கன்னத்தில் தழும்பு—மிலிடெரிக்காரர்—செல்லையா கூறிய சாமியாரின் கதை!............புரொபசருக்கு முகம் குப்பென்று வியர்த்தது.

•  •  •

தூரத்தில் அலைகடலின் இரைச்சல்...

நிறைவேறாத கனவுகளும் நினைக்க மட்டுமே முடிந்த நினைவுகளுமாய் சேர்ந்து புரொபசரைத் தூங்கவொட்டாமல் அடித்தன. அவர் புரண்டு புரண்டு படுத்தார். கைக்கு எட்டும் தூரத்தில் அவருடைய சின்னஞ் சிறிய பாலகன் கண்ட கனவின் விளைவோ என்னவோ கன்னம் குழிபடச் சிரித்தவாறே உறங்கிக் கொண்டிருந்தான். மேலே சுழன்ற மின்விசிறி குமரனின் முன் நெற்றிக் கேசத்தை அலைத்துக் கொண்டிருந்தது. அவன் தூங்கும் அழகைப் பார்த்துக் கொண்டிருந்தவருக்கு மாலையில் செல்லையா கூறிய ஆலமரத்தடி சாமியாரின் கதை நினைவுக்கு வந்தது. இதயம் வலியெடுக்க எழுந்து மாடி வராந்தாவுக்கு வந்தார்.

அந்த இருளிலும் தொலைவில் பிரம்மாண்டமாய் விழுதுவிட்டுப் படர்ந்து நின்ற ஆலமரம் பயங்கரமான பிசாசைப்போலக் கண்ணுக்குப் புலப்பட்டது. 'ஓ... ஆலமரம்!... அவர் மனம் விம்மியது. எத்தனை நேரமாய் இருளில் தலைவிரித்தாடும் அந்தப் பிரம்மாண்டத்தையே வெறித்துக் கொண்டிருந்தாரோ, நினைவுகள்... நினைவுகள்... நினைவிற்கு முடிவேது?

சட்டென்று திரும்பி மாடியிலிருந்து இறங்கி வந்தார். ஒரு அறையினுள் நுழைந்து விளக்கைப் போட்டார். சாவியை எடுத்து பீரோவைத் திறந்தார். ஒரு ஆல்பம்... அதைக் கை நடுக்கத்துடன் எடுத்தார். விழிகள் நீரால் நிறைந்தன. விரல்கள் ஆல்பத்தைப் புரட்டின.

ஒரு அழகு மங்கையும், அவள் அருகில் இராணுவ உடையுடன் அவள் தந்தையும் நின்று கொண்டிருந்த காட்சி! புகைப் படத்தை உற்றுப் பார்த்தார் புரொபசர். படத்தில் இராணுவ வீரரின் கன்னத்திலே இருந்த தழும்பையே வெறித்தார் 'சாமியார் மிலிடெரியிலே இருந்தவருங்க; கட்டுமஸ்தான் தேகம். முகத்துலே கன்னத்து கிட்டே தழும்பு ஒண்ணு மட்டும் இல்லேன்னா அவரு பொலிவு யாருக்குங்க வரும்?''—மாலையில் செல்லையா கூறியது ஞாபகம் வந்தது. அப்படியானால்....... அப்படியானால் புகைப் படத்திலிருப்பவரும் ஆலமரத்தடி சாமியாரும் ஒருவர்தானா?

குழப்பத்துடன் ஆல்பத்தை மூடியபோது அதனுள்ளிருந்து கீழே விழுந்தது ஒரு கவர். குனிந்து அதை எடுத்தார் புரொபசர். அதில் ஒரு கடிதம்...முத்து முத்தான எழுத்துக்களில்.

அதில் ஒரு காவியமே அல்லவோ அடங்கியிருக்கிறது!...

கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளுக்கு முன்—

நினைக்கத் தெரிந்த மனத்திற்கு மறக்கத் தெரியாத ஒரு கொடுமையினால் புரொபசர் துடியாய்த் துடித்தார். அந்தப் பழம் நினைவுகள்...!

கல்யாணியும் அவரும் வேலனூர் பாலமான் ஆற்றங்கரை மகிழ மரத்தடியில் நேரம் போவதே தெரியாமல் பேசிக் கொண்டிருக்கும் காட்சி...தெய்வசந்நிதியில் யாரும் அறியாமல் மாலை மாற்றிக் கொண்டது அதன் பிறகு ஊராரின் தூற்றல் பழி, சுவரில் ''ஆனந்த்—கல்யாணி கள்ளக்காதல்'' என்று கரிக் கிறுக்கல்கள...

தந்தை இராணுவத்தில் பணிபுரிய வயதான அத்தையின் பராமரிப்பில் வாழ்ந்து வந்தாள் விடுமுறையில் வந்து மகளுக்குத் திருமணம் நடத்திவிட வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தார் இராணுவத்திலிருந்த அவள் தந்தை! மகளோ ரகசியக் காதலில் ஈடுபட்டிருந்தாள்.

கல்யாணியின் தாய்மாமனும் மற்ற சொந்தக்காரர்களும் கருவிக் கொண்டிருந்தார்கள். கல்யாணி காதலிக்கும் ஆனந்தருடைய உயிருக்கே உலை வைத்துவிட ரகசிய ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன.

ரகசியச் சந்திப்புகளின் விளைவாக கல்யாணியின் வயிற்றில் தங்களுடைய அன்பின் சின்னம் வளர்ந்து வருகிறது என்ற செய்தி அறிந்து புரொபசர் மகிழ்ந்தார் ஊரறிய அவளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று துடித்தார். ஆனால் — அச்சமயத்தில், கல்யாணி திடீரென்று ஊரைவிட்டு எங்கோ சென்றுவிட்டாள்!

''கல்யாணி! நீ எங்கே போனாய், என்னைத் தவிக்கவிட்டு?'' அவர் அலறினார். அவரும் அவளும் பேசி மகிழ்ந்த மகிழமரத்தடி, பாலமான் ஆறு, சிறைமீட்ட விநாயகரின் கோவில் எல்லாமே அவரை எள்ளி நகைத்தன. பைத்தியமே பிடித்துவிடும்போலிருந்தது அவருக்கு.

மனமாற்றத்திற்காக வேறு ஊரில் வேலை தேடினார் — வையம்பட்டி காலேஜில் கிடைத்தது. மாதங்கள் சில ஓடின. விரிவுரையாளர் பதவியிலிருந்து பேராசிரியர் பதவிக்கு உயர்ந்தார். அந்தச் சமயத்தில் ஒரு பெண் அவரைத் தேடி வந்தாள், கையில் ஒரு குழந்தையுடன்.

கடிதம் ஒன்றையும், குழந்தையையும் அவரிடம் சேர்ப்பித்துவிட்டு அவள் சென்றுவிட்டாள். கடிதம் எழுதியவள்—கல்யாணிதான்!

''என் அன்புத் தெய்வமே,

வணக்கம். உங்களிடம் கூட சொல்லிக்கொள்ளாமல் ஊரை விட்டு ஓடி வந்துவிட்டதற்கு மன்னிக்கவும். நீங்களும் நானும் அன்பால் பிணைக்கப்பட்டோம். ஆனால் சமூகம் அதை ஏற்காது என்பது எனக்குப் புரியவந்தது. நான் தாழ்ந்த குலத்தவள், உங்கள் அந்தஸ்து — படிப்பு, உங்களுக்கிருக்கும் பெயரும் புகழும் ஏதோ கொஞ்சம் படித்த, அரிசனப் பெண்ணாகிய என்னை மணப்பதால் குலைந்துவிடும் என்பதை நான் அறிவேன். நீங்களும் நானும் மலையும் மடுவுமாக உள்ளவர்கள். நீங்கள் என்னை மணப்பதற்குத் தயாராக இருக்கலாம், தெய்வத்தின் பக்தை நான் தூர இருந்து தரிசிக்கவும், பக்தி செலுத்தவும் மட்டுமே தகுதியுள்ளவள். தெய்வத்தின் அருகில் அமர எனக்கு ஏது அருகதை? தவிர, என்னைச் சேர்ந்தவர்கள் உங்கள் உயிருக்குத் தீங்கு செய்யத் திட்டம் தீட்டியதைக் காதால் கேட்டேன். என்னால் உங்களுக்கு அபகீர்த்தியோ ஆபத்தோ ஏற்படுவதை நான் விரும்ப முடியுமா? அதனால்தான் ஊரை விட்டு ஓடிவந்து நர்சாகப் பணிபுரியும் தோழி நளினியிடம் அடைக்கலம் புகுந்தேன். இத்தனை நாள் அவள் ஆதரவில் தங்கியிருந்தேன். சமயத்தில் கை கொடுத்தாள். உங்கள் குழந்தையை அவள் மூலமாகவே அனுப்பிவைக்கிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள். வளர்த்து உங்களைப் போலவே அறிஞராக்குங்கள். இந்த உலகில் வாழ எனக்குப் பிடிக்கவில்லை. நான் உங்கள் வாழ்க்கைப் பாதையில் பாதிவழியில் வந்தவள், பாதியிலேயே பிரிந்துசென்று விடுவதற்காக என்னை மன்னித்துவிடுங்கள்.

என்னும் உங்கள்,
கல்யாணி.

கடிதத்துடனும் குழந்தையுடனும் வேலனூருக்குச் சென்று அங்கு அவர் இல்லையென்று தெரிந்து மிகவும் கஷ்டப்பட்டு ஆனந்தரின் விலாசம் அறிந்து வந்துசேர்த்திருந்தாள் அந்தப் பெண் நளினி.

தாழ்வு மனப்பான்மையால் கல்

---

### அண்ணா நிலா!

தணந்தோர் வெதும்பித் தலைகவிழ அன்பால்
இணைந்தோர் ஒருமுகமாய் இன்புற—நணைந்தாடத்
தண்ணார் அமிழ்து தரநற் றமிழுலகில்
அண்ணா நிலவாயி னார்!

—செவ்வேள்.

யர்ணி மனம் கலங்கித் தன்னையும் இந்த உலகையும் துறந்து சென்று விட்டாள் என்ற உண்மை அவரை நிம்மதியற்றவராக்கிற்று. தன் வாழ்வை முடியாத ஒரு கதையாக, நிறைவேருத ஒரு கனவாக ஆக்கி விட்டாளே கல்யாணி என்ற வேதனையால் குமைந்தார். குழந்தை குமரனுடன் புதுப்பட்டிக்குச் சென்று அந்த ஊரின் அமைதியில் மன நிம்மதி தேடி வந்தார்

"கல்யாணி! நாமிருவரும் ஒரு புகைப்படம் எடுத்துக் கொள்வோமே" என்று ஒருமுறை அவர் ஆசையுடன் கூறியபோது. "போட்டோவா? ஊஹூம். வேண்டாமுங்க யாருக்காவது தெரிந்தால் ஆபத்து. நானும் பட்டாளத்துலேயிருக்கிற என் அப்பாவுமாச் சேர்ந்து எடுத்துக்கொண்ட படம் ஒண்ணு நான் வெச்சிருக்கேன். அதை வேணும்னு தர்றேன்!" என்று கூறி மறுநாள் அந்தப் புகைப்படத்தைக் கொண்டு வந்தும் தந்தாள் கல்யாணி.

அந்தப் படம்—அவள் கடைசியாக எழுதிய கடிதம், இரண்டையுமே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார் புரொபசர். நினைவைத் தந்தவள் நினைவாகிவிட்டாள்! படத்தில் அவள் அருகிலே விறைப்பாக நின்ற இராணுவ வீரர்...? இப்பொழுது நிச்சயமாகப் புரிந்து விட்டது. ஆலமரத்தடி சாமியார்தான் கல்யாணியின் தந்தை என்ற உண்மை!

• • •

வேலைக்காரன் செல்லையா கூறிய சாமியாரின் கதை—

"மிலிடெரியில் இருக்கிறபோது அவர் மகளிடமிருந்து கடிதம் ஒண்ணு வந்துச்சாம், அந்தப் பொண்ணு யாரோ ஒரு காலேஜ் வாத்தியாரைக்காதலிச்சதாம். ஆனு ஊரிலே பெரிய எதிர்ப்பு ஏற்பட்ட காரணத்தாலே வெளியூருக்குப் போய் தன்னேட தோழி ஒருத்தி வீட்டில் தங்கிச்சாம். தனக்குப் பிறந்த குழந்தையை குழந்தையின் தகப்பனுன காலேஜ் வாத்தியாரிடம் சேர்க்கச் சொல்லிவிட்டுத் தற்கொலை செய்துகிடுச்சாம்! மிலிடெரியில் இருந்தவருக்கு மகளுடைய கடிதம் அதிர்ச்சியைத் தந்ுடுச்சு. பாவம்! உடனே ஓடிவரத் துடிச்சார். அப்படி வந்துதான் என்ன புண்ணியம். மகள்தான் செத்துட்டாளே, மகளைக் காதலித்த புண்ணியவானையும் பேரப்பிள்ளையையும் பார்ப்பதற்காக வர முனைந்தார். சீன யுத்தம் தொடர்ந்து பாகிஸ்தான் யுத்தம் என்று வந்து விடுமுறையே பெற முடியாமல் தடுத்தது. எட்டு வருசத்துக்கு அப்புறம் ரிடையரே ஆகித் திரும்பி வந்திருக்காரு. ஊரில் மகளைப்பற்றியோ, மகளைக் காதலித்த புண்ணியவானைப் பற்றியோ கேட்டால் யாருக்குமே சொல்லத் தெரியலையாம். எட்டு வருசமாச்சே, சும்மாவா? மனசு வெறுத்துப்போய் காவி கட்டிகிட்டு சாமிமேலே பக்திப் பாடல்களைப் பாடிகிட்டு ஊர் ஊராத் திரிஞ்சாரு. கடைசியா நம்ப ஊருக்கு வந்து இங்கேயே தங்கிகிட்டாரு. அவருக்கு கடைசி கடைசியா தன் பேரனையும், மருமகப் பிள்ளையையும்ஒரே ஒருதடவையாவது பாக்கணுமின்னு கொள்ளை ஆசைங்க ஆனு ஆண்டவன்தான் கருணை வைக்கணும்!" என்று மூச்சு விடாமல் செல்லையா பேசி முடித்தபோது புரொபசருக்கு மயக்கமே வந்துவிடும் போலிருந்தது.

எந்த நினைவுகளை மறக்கத் துடித்தாரோ, எந்தக் காரணத்துக்காக நகரத்தைவிட்டுக் கிராமத்து அமைதியில் தன்னைப் புதைத்துக் கொண்டாரோ—அந்த அவருடைய கல்யாணியின் நினைவுகளைத் தூண்டிவிடப் புதுப் பந்தம் ஒன்று ஆலமரத்தடிச் சாமியார் வடிவில் அவரைத் தேடி வந்திருக்கிறது என்ற உண்மை தெரிந்தபோது புரொபசருக்கு நெஞ்சே வெடித்துவிடும் போலிருந்தது.

"ஐயா! நீங்கள் தேடித்திரியும் உங்கள் பேரனுடன்தான் நீங்கள் தினமும் விளையாடி மகிழ்கிறீர்கள். உங்களுடைய மகளைக் காதலித்த பாவி இதோ இருக்கிறேன் ஐயா!" என்று அவர் முன்னுல் சென்று கத்தவேண்டும்போல மனம் உணர்ச்சி வசப்பட்டது.

மறுநாள்—பொழுதுவிடிந்தது.

குமரனைக் கையில் பிடித்துக் கொண்டார் புரொபசர் "வா குமரா, போகலாம்!"

"எங்கேயப்பா?..." வியப்போடு கேட்டான் குமரன். புயல் அடித்து ஓய்ந்த அமைதி புரொபசரின் முகத்தில் காணப்பட்டது. முறுவலித்துக் கொண்டே "ஆலமரத்தடித் தாத்தாவிடம் நாம் இப்போது போகிறோம், தெரியுமா?" என்றபோது. "ஹையா!...வாங்கப்பா!" என்று துள்ளிக் குதித்தான்.

இன்னும் சிறிது நேரத்தில் ஆலமரத்தடி சாமியாரிடம் — தன்னுடைய மாமாவிடம்—அவருடைய பேரனைச் சேர்ப்பித்துவிடப் போகிறோம்; அவருடைய இத்தனை ஆண்டுகாலத் தவிப்பைத் தீர்த்து வைக்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சி முகத்தில் துலங்க அவர் குமரனுடன் நடந்தார். அவர் நடந்து செல்வதைத் தெருவில் எல்லோரும் வியப்பாகக் கவனித்தனர். 'புரொபசர் ஐயா மகனை அழைச்சுகிட்டு எங்கே கிளம்பிவிட்டார்?' என்ற வினு அவர்கள் முகங்களில் நெளிந்தது.

ஆலமத்தை நெருங்கியபோது அங்கே ஒரே கூட்டம்!

"புரொபசர் வர்ருரு. எல்லோரும் வழியை விடுங்க நகருங்க, அவரு பாக்கட்டும்..." என்று ஆளுக்கு ஆள் மரியாதையுடன் கூறி வழி விட்டனர். 'என்ன?......என்ன?" புரொபசருக்கு மனம் படபடத்தது.

கிராம மணியம் கூட்டத்தை ஒதுக்கிக்கொண்டு புரொபசரின் முன்னுல் வந்தார்; ராத்திரியிலேருந்து ஒடம்பு சரியில்லாமக் கிடந்தாருங்க. கல்யாணி!...என் பேரன்! ...அப்படி இப்படின்னு என்னென்னவோ சொல்லிப் புலம்பிகிட்டேயிருந்தாருங்க. காலையிலே திடீருன்னு சாமியாரின் கதை முடிஞ்சு போச்சுங்க. பாவம், நல்லவங்க உலகத்திலே வாழறதுதான் அந்தக் கடவுளுக்குப் புடிக்காத விஷயமாச்சுங்களே!..."

புரொபசருக்கு உலகமே சுழல்வது போலிருந்தது. "தாத்தா!... தாத்தா!" என்று கதறியழுதான் குமரன்,

புரொபசரின் மனம் கூக்குரலிட்டது:

"மாமா! மாமா! இதோ நீங்கள்தான் உண்மையான தன் தாத்தா என்று தெரியாவிட்டாலும் தாத்தா தாத்தா என்று முட்டி மோதிக் கதறுகிறுனே நீங்கள் தேடிக்கொண்டிருந்த உங்கள் பேரன்; கண்ணைத் திறவுங்கள் மாமா!...இதோ உங்கள் மருமகன் வந்திருக்கிறேன். மாமா! நாங்கள் கதறுகிறோமே உங்கள் காதில் விழவில்லையா?..."

அவர்களின் புலம்பல்கள் ஆலமரத்தடி சாமியாரின் காதில் விழும் காலம்தான் கடந்து விட்டதே!

---

## அண்ணு மழை!

எங்கெங்கும் ஓடி
இடிக்குறலிற் ருன்முழங்கி
பொங்கும் படியரிசி
பொன்ருது—பொங்கலிட
நண்ணுர்க்கும் நண்பர்க்கும்
நல்லனவே நாடியதால்
அண்ணு மழையாம் அறி!

—செல்வேள்

# ஆட்சிக் கட்டிலில் அண்ணா!

தொகுப்பு:
மு. இளங்கோவன்
பி.ஏ.பி.டி.,

தமிழகத்தில் 4-வது பொதுத் தேர்தல் முடிந்து ஆட்சிப் பொறுப்பேற்கும் நிலையில் அறிஞர் அண்ணா அவர்கள் பெரியார் ஈ. வெ ரா., முன்னாள் முதலமைச்சர் பக்தவச்சலம், டாக்டர் லட்சுமண சாமி முதலியார், ராஜாஜி முதலிய தலைவர்களைச் சந்தித்தார். காமராசரைச் சந்திக்க விரும்பினார். ஆனால், அவர் ஊரில் இல்லாததால் டில்லியிலிருந்து அவர் திரும்பியவுடன் சென்று சந்தித்துக் கலந்துரையாடினார். "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு" என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டினார்.

• • •

மாநிலத்தின் தலைமை வழக்கறிஞரை மாநில அரசு நியமிக்கும் பொழுது உயர் நீதிமன்றத்தைக் கலந்துதான் நியமிக்க வேண்டும் என்ற சட்டமோ, நியதியோ இல்லை. இவ்விதம் இருந்தும் வழக்கறஞரை நியமிக்கும்பொழுது உயர்நீதி மன்றத்தைக் கலந்தே நியமித்தார். உயர்நீதி மன்றத்திற்குரிய உயர்ந்த மதிப்பை மேலும் உயர்த்தினார்.

• • •

சட்டப் பேரவையின் துணைத் தலைவர் பதவியை எதிர்க் கட்சிக்குத் தருவதுதான் மக்களாட்சி மரபு என அறிஞர் அண்ணா அவர்கள் சட்ட மன்றத்தில் எதிர்க் கட்சியில் இருந்தபோது வலியுறுத்தினார். ஆனால், அப்பொழுது ஆளுங் கட்சியான காங்கிரஸ் அவ்வேண்டுகோளைப் பொருட்படுத்தவில்லை. அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை யேற்றதும் துணைத் தலைவர் பதவியைக் காங்கிரசுக்குத் தர விரும்பினார். அண்ணாவின் பெருந்தன்மையைப் புரிந்து கொள்ளாத காங்கிரசினர் அப்பதவியை வேண்டாமென்று கூறினர். சிறந்த மக்களாட்சி மரபை வளர்க்க அண்ணா நேசக்கரம் நீட்டிய காலை, காங்கிரசினர் அதைப் பாசமுடன் ஏற்றுக் கொள்ளவில்லை.

• • •

அண்ணா அவர்கள் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும் தென்சென்னை நாடாளு மன்ற உறுப்பினர் பதவியைத் தக்கதொரு காங்கிரசுத் தலைவர் போட்டியிட்டால் கழகத்தின் சார்பில் யாரும் போட்டியிடாமல் விட்டுக் கொடுப்பதாக அறிவித்தார். ஆனால், காமராசர் போன்ற தலைவர்கள் "இவர்கள் இடும் பிச்சையை நாம் என்ன பெறுவது" என உதறித் தள்ளினர். அதே தென்சென்னையில் நடந்த இடைத் தேர்தலில் கழகம் பொதுத் தேர்தலில் பெற்ற வாக்குகளைவிட 25000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றது. அண்ணாவின் நேசக் கரத்தைப் பற்ற மறுத்தோர்க்கு மக்கள் தந்த பரிசு!

அமரர் அண்ணா அவர்கள் இன்றில்லை — என்று கூறமுடியவில்லை. ஆட்சிக் கட்டிலேறி அவர் செய்துகாட்டிய பண்பாட்டுச் செயல்கள் சில, அறிஞர் அவர்களை காலமெலாம் பசிய நினைவில் இருத்தி வைக்கும். இன்று நினைந்து பார்க்கிறோம்! அதற்கு இது பயன்படும்.

• • •

1967 பொதுத் தேர்தலில் தோல்வி அடைந்த "காபந்து அரசாங்க" முதலமைச்சரான பக்தவச்சலம் அவர்கள் அரசாங்க பைல்களைக் கொளுத்திவிட்டு வெளியேறினார். இதுபற்றி பக்தவச்சலத்தின் மீது விசாரணை நடத்த வேண்டுமெனச் சட்ட மன்ற உறுப்பினர்கள் வற்புறுத்தினர். இதற்கு அறிஞர் அவர்கள், "சட்ட மன்றத்தில் நடந்த இந்த விவாதமே போதுமானது. விசாரணைக்கு அவசியமில்லை" எனக் கூறித் தனது அரசியல் பெருந்தன்மையை நாட்டுக்கு எடுத்துக் காட்டினார்.

• • •

காங்கிரசார் ஆளுங் கட்சியாக இருந்தபோது ராஜாஜி மண்டபம் அருகே அவர்களது சட்டசபைக் கட்சி அலுவலகம் அமைந்திருந்தது. 20 பேர் தாராளமாக அமர முடியாத ஒரு இடத்தில் 50 பேரைக் கொண்ட அப்போதைய எதிர்க் கட்சியான தி. மு. க. செயல்பட்டு வந்தது. கழகம் 138 உறுப்பினர்களைக் கொண்டு ஆளுங் கட்சியாக மாறிய பிறகு காங்கிரசு சட்டசபைக் கட்சி அலுவலகத்திற்கு மாற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால், காங்கிரசினர் கேட்டுக்கொண்டதற்கேற்ப குறுகிவிட்ட காங்கிரஸ் கட்சி அலுவலகம் முன்பிருந்த பெரிய இடத்திலேயே இருக்க அண்ணா அனுமதித்தார். இந்தப் பெருந்தன்மையும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் எந்த ஒரு காங்கிரஸ்காரரின் உள்ளத்திலாவது காண முடியுமா?

• • •

அமைச்சர்களது வீடுகளில் பார்வையாளர் பகுதி, போலீசார் தங்குவதற்கேற்ற வசதி முதலியவைகளை அரசாங்கமே கட்டித் தருவது வழக்கம். காங்கிரஸ் அமைச்சர்களான பக்தவச்சலம், ஜோதி அம்மாள் ஆகியோரின் வீடுகளுக்கு

## அண்ணா சொன்னவை!

முதலை உண்ட பாலனை வரவழைத்த மொழி என்று புராணம் பேசும், வெறும் மொழியைப் புகழும் காரியமல்ல. மொழி, வாழ்க்கைக்கு வழி! தமிழருக்குத் தமிழ். இன்று நேற்றல்ல, இளைத்தும் களைத்துமல்ல, வறண்டும் சுருண்டுமல்ல, வளத்துடன், பல ஆயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது. அம்மொழியின் இயல்பினாலும், செயலினாலும், தமிழருக்கென ஓர் வாழ்க்கை முறை அமைந்திருக்கிறது—வீரத்தைப் போற்றும் வாழ்க்கை முறை — விவேகத்தை வளர்க்கும் வாழ்க்கைமுறை— ஜாதியை அறியாத வாழ்க்கைமுறை— சூதுவாதறியாத வாழ்க்கை முறை. இந்தப் பண்பாடு மொழியின் வழி பிறந்தது. இந்தப் பண்பாட்டின் பெட்டகமுமாயிற்று மொழி! அந்த மொழிக்கு அரசவையிலே உயரிடம் இருந்தது! அம்மொழியினால் ஆக்கப்பட்ட அணிமணிகள் பலப்பல உள்ளன.

—'திராவிட நாடு'

விஸ்தரிப்பு வேலைகள் முன்பு செய்து தரப்பட்டன. தற்பொழுது கழக அமைச்சர்கள் தங்களது வீடுகளில் விஸ்தரிப்பிற்காக ஏற்பட்ட செலவுகளைத் தாங்களே ஏற்றனர். மக்கள் பணத்தைத் தங்கள் சொந்த நலனிற்குப் பெற அண்ணாவின் அமைச்சர்கள் விரும்பவில்லை.

* * *

தற்பொழுது நாட்டில் அரசியல் தலைவர்களுக்கு அதிக—முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலை மாறி கல்வி, மருத்துவ, பொறியியல் நிபுணர்களுக்கே அதிக முக்கியத்துவம் தரப்படவேண்டுமென அறிஞர் அண்ணா அவர்கள் வேண்டுகோள் விடுத்தார் இவ் வேண்டுகோள் மெள்ள மெள்ள நிறைவேறி வருகிறது.

* * *

1962–இல் அறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் நடேச முதலியார் எனும் காங்கிரஸ்காரரால் தோற்கடிக்கப்பட்டார். காங்கிரசார் நடேச முதலியாரின் வெற்றி விழாவை நாடெங்கிலும அவரை அழைத்துப் பாராட்டிக் கொண்டாடினர். காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் நேரு சென்னை வந்தபோது காமராசர், நடேச முதலியாரைக் காண்பித்து நேருவிடம், "இவர் தான் அண்ணாதுரையைத் தோற்கடித்தவர்" என்று அறிமுகப்படுத்தினார். 1967-இல் தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்தது. ஒரு அமைச்சரைத் தவிர்த்து மற்ற எல்லா அமைச்சர்களும் தோற்றனர், காங்கிரசின் பெரும் தலைவர் தோற்றார். இவ்வளவு மகத்தான வெற்றி பெற்ற கழகத் தோழர்களை அண்ணா அவர்கள் அடக்கத்துடன் செயலாற்றுமாறு பணித்தார்! அண்ணாவோ, மற்ற கழகத்தவரோ நினைத்திருந்தால், காமராசரைத் தோற்கடித்த மாணவர் சீனிவாசனை ஊர் தோறும் அழைத்து, "இதோ இந்தச் சிறு மாணவர்தான், பெருந்தலைவர் காமராசரைத் தோற்கடித்தவர்," என அவர் பெயருக்கு மாசு கற்பித்திருக்க முடியும். ஆனால் கழகத்தவர் அடக்கத்துடன் அண்ணாவின் 'மறப்போம்—மன்னிப்போம்'' என்ற தத்துவத்திற்கேற்ப அதைச் செய்யவில்லை.

* * *

கோவையில் 8—2—68இல் மாணவர் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது மத்திய துணை அமைச்சராகிய ராமசாமி அவர்கள் மீது யாரோ ஒருவர் கல் வீசியதற்குத் தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் மன வேதனையும், வருத்தமும் அடைந்து அந்நிகழ்ச்சிக்காக வருத்தம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டார். ஆனால் தஞ்சை மாவட்டம் பேராவூரணியில் அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தங்கியிருந்த இடத்திற்குள் நுழைந்தே காங்கிரசார் தாக்கினர். இந்நிகழ்ச்சிக்கு எந்தக் காங்கிரசுத் தலைவரும் வருத்தம் தெரிவிக்கவில்லை. இதேபோல் 68 ஆகஸ்ட் முதல் நாள் சென்னை மவுண்ட் ரோடில் உள்ள அண்ணா அவர்களின் சிலை மீது காங்கிரசினர் செருப்பையும், கறுப்புத் துணைகளையும் வீசினர். அவ்வழியே செல்லும் போது தலையில் முக்காடு போட்டுக் கொண்டு சென்றனர். இந்நிகழ்ச்சிகளுக்காக வருந்தி எந்த ஒரு காங்கிரசுத் தலைவரும் வருத்தம் தெரிவிக்கவில்லை.

தேனியில் நடந்த தி. மு. கழகக் கூட்டத்தில் கல்லெறிந்தார்கள் என இரு காங்கிரசுக் காரர்கள் கைது செய்யப்பட்டார்கள். தேனியில் திருவிழாக் கூட்டம் இருந்ததால் "எங்கே தப்பி ஓடிவிடுவார்களோ" என்று பயந்து போலீசார் கைவிலங்கிட்டு அவர்களை அழைத்துச் சென்றனர். இந்நிகழ்ச்சி அண்ணாவுக்குத் தெரிய வந்ததும சட்டசபையில் கைவிலங்கு இடப்பட்டதற்காக வருத்தம் தெரிவித்தார். இந்நிகழ்ச்சிக்குப் பொறுப்பான இரு போலீஸ் காரர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டார்கள். கைவிலங்கிட்ட தலைமைப் போலீஸ் கான்ஸ்டபிளுக்குச் சம்பள உயர்வு நிறுத்தப்பட்டது. சரியான தகவல் தராத மாவட்ட போலீஸ் அதிகாரி கண்டிக்கப்பட்டார். இவைகள் யாவும் ஜனநாயகத்தின் காவலன் அண்ணாவின் ஆட்சியில் நடந்தவை ஆகும். இது அண்ணாவின் தூய்மையான ஆட்சிக்கு ஓர் எடுத்துக் காட்டு. காங்கிரஸ் ஆட்சியில் கழகச் சட்டமன்ற உறுப்பினர் பாலகிருஷ்ணனுக்கோ, முன்னாள் சட்டமன்றத் தலைவர் ஆதித்தனுக்கோ, அமைச்சர் கோவிந்தசாமிக்கோ கையில் விலங்கு போட்டுத் தெருவில் அழைத்துச் சென்றபோது காங்கிரஸ் அமைச்சர்களோ மற்றவர்களோ வருத்தம் தெரிவித்தது உண்டா?

* * *

கழகத்தினர் ஆட்சிக்கு வந்தால் கோயிலை இடித்து விடுவார்கள் எனப் பிரச்சாரம் செய்தனர். அக் கழகத்தினர் ஆட்சியில்தான் சுமார் 15 லட்சம் மக்கள் கலந்துகொண்ட கும்பகோணம் மகாமகத் திருவிழா சீரும் சிறப்புமாக நடந்தது. அவ் விழாவுக்கு ரூ. 5 லட்சம் செலவில் புதிய சாலைகள் போடப்பட்டன. கும்பகோணம் நகர சபைக்கு ரூ. 2 லட்சம் உதவி அளிக்கப்பட்டது. அண்ணா, தான் நடத்துவது 'ஒரு கட்சி ஆட்சி' அல்ல, நாடு முழுவதுக்குமான "மக்களாட்சி" என்பதை எடுத்துக் காட்டினார்.

* * *

துலுக்கப்பட்டி சிமென்ட் தொழிலாளர்கள் தகராறில் கழக எம். எல். ஏ., சீனிவாசன் தொழிற்சாலைக்குள் அத்து மீறிப் பிரவேசித்ததற்காகப் போலீசாரால் கைது செய்யப்பட்டார். கழகத் தொழிற் சங்கத் தலைவர் எஸ். ராகவானந்தம் எம். எல். சி., சென்னையில் ஈசன் குரூப் தொழிற்சாலையில் தொழிலாளர்கள் தகராறு மத்தியஸ்த தீர்ப்புக்கு விடப்பட்டதற்கு மீறி உண்ணாவிரதம் இருக்க முயற்சித்தபொழுது கைது செய்யப்பட்டார். இந்நிகழ்ச்சிகள் "சட்டத்தின் முன் எல்லோரும் சமம்; "தவறிழைப்போர் கழகத்தவராயினும் சட்டம் தனது பணியைக் கழக அரசில் ஆற்றும்'' என்பதற்கு அறிஞர் அண்ணாவின் நிர்வாகம் சான்று பகர்ந்தன.

* * *

நகரசபைத் தேர்தலைக் கட்சிச்சார்பில்லாமல் நடத்த வேண்டுமென அண்ணா அவர்கள் பலமுறை விருப்

பம் தெரிவித்தும்; காங்கிரசினர் இந் நல்ல திட்டத்திற்கு வரவேற்பும் ஆதரவும் தெரிவிக்கவில்லை. இதிலிருந்து காங்கிரசினர் அரசியலுக்கே அதிக முக்கியத்துவம் தருகிறார்கள் என்பது வெளிப்படையாயிற்று.

• • •

காங்கிரசு ஆட்சியில் அரசின் பழைய பஸ்களை ஒரு குறிப்பிட்ட கம்பெனிக்கே விற்று வந்தது. இதனால், கழக ஆட்சியில் பழைய பஸ்களை விற்பதைக் கண்காணிப்பதற்கு "கண் காணிப்புக் குழு" ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இக் குழுவில் காங்கிரசினராகிய திரு. காசிராமன், திரு. ஏ. ஆர். ராமசாமி ஆகியோரும் உள்ளனர். எதிர்க் கட்சியினர்க்கும் வாய்ப்பளித்த அண்ணாவின் ஆட்சி ஜனநாயக ஆட்சியா? எதிர்க் கட்சியை மதியாத கடந்த கால காங்கிரசு நடத்திய ஆட்சி ஜனநாயக ஆட்சியா? இதைப் போன்றவை அண்ணாவின் ஆட்சியில் மக்கள் கண்டு வரும் உண்மைகளாகும்.

• • •

காங்கிரசு ஆட்சிக் காலத்தில் தொழிலாளர் தலைவர்கள் மதிக்கப் படவில்லை. கழக ஆட்சியில் தொழிலாளர் சம்பந்தப்பட்ட எப் பிரச்னையிலும் சம்பந்தப்பட்ட எல்லாத் தொழிலாளர் தலைவர்களும் அமைச்சர்களால் அழைத்துப் பேசப் படுகிறார்கள். முதலாளிகள், தொழிலாளர் தலைவர்கள், அதிகாரிகள் அடங்கிய முத்தரப்பு மாநாடுகளின் மூலம் தொழிலாளர் தகராறுகளை உடனடியாகத் தீர்த்து வருகின்றனர். கோவை பஞ்சாலைப் பிரச்னை சம்பந்தமாக மத்திய தொழில் துறை அமைச்சர் திரு. தினேஷ் சிங்கைச் சந்திக்கும்போது அறிஞர் அண்ணா அவர்கள் திரு. ராமமூர்த்தி, எம். பி. அவர்களையும் உடன் அழைத்துச் சென்றார். எப்பிரச்னையிலும் சம்பந்தப்பட்ட யாவரையும் கலந்தே முடிவெடுக்க வேண்டும் என்பதே அண்ணா வளர்க்கும் அரசியல் இலக்கணம்.

• • •

முந்தைய காங்கிரசு அமைச்சர்கள் அரசாங்கப் பணத்தில் கட்சிப் பிரச்சாரம் செய்து வந்தனர். கழக அமைச்சர்கள் தங்களது சுற்றுப் பயணத்தின்போது ஒரு கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டாலும் பயணச் செலவை அரசிடமிருந்து பெறுவதில்லை.

• • •

அறிஞர் அண்ணா அவர்கள் அதிகாரிகளுக்கு அமைச்சர்கள் சுற்றுப் பயணத்தின்போது கடைபிடிக்க வேண்டிய முறைகள்பற்றி ஆணையே பிறப்பித்தார் 'மாவட்டங்களில் அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செய்யுபோது அதிகாரிகள் அன்றாட அலுவலுக்கு ஊறு ஏற்படும் வகையில்வரத்தேவையில்லை' என்றார்.

• • •

தூத்துக் குடியில் காமராசர் பெயரில் ஒரு கல்லூரி அமைப்பதற்கு இந்திய அரசிற்குச் சொந்தமான 50 ஏக்கர் நிலத்தைக் கேட்டார்கள். மத்திய அரசு ஏக்கருக்கு ரூ. 5000 வீதம் ரூ. 2½ லட்சம் கேட்டது. அண்ணா அவர்கள் இவ் விஷயத்தை டில்லி அமைச்சர்களிடம் பேசி 50 ஏக்கர் நிலத்திற்கும் ஆண்டுக்கு ரூ. 1 வீதம் வாடகைக்கு 100 ஆண்டுகளுக்குப் பெற்



றுத் தந்தார். இந்நிகழ்ச்சி அண்ணா அவர்கள் எதிர்க்கட்சிக்கும் காமராசருக்கும் அளிக்கும் உயரிய மதிப்பாகும்.

• • •

காங்கிரசு அமைச்சர்கள் மாதம் ரூ. 1000 சம்பளம் பெற்றனர். காந்தியாரின் கொள்கை அமைச்சர்கள் யாரும் மாதம் ரூ. 500க்கு மேல் பெறக்கூடாது என்பது. அக் காந்தியாரின் கொள்கைப்படிக் கழக அமைச்சர்கள் மாதம் ரூ. 500 மட்டுமே பெற்று எளிய வாழ்க்கை வாழ்கின்றனர்.

• • •

கழக அமைச்சர்கள் "எல்லாம் எங்களுக்குத் தெரியும்" என்று காங்கிரசு அமைச்சர்களைப்போல அதிகார ஆணவத்தில் பணியாற்றி வரவில்லை. "மக்கள் குரலே மகேசன் குரல்" எனவும் எப்பிரச்னையிலும் மக்களை அணுகி "எங்களுக்கு வழி காட்டுங்கள்" எனவும் மக்களின் விருப்பப்படி மக்களின் கருத்தறிந்து செயல் படுகின்றனர். அரசால் முடியாததையும் மக்கள் எழுச்சி செய்து காட்டலாம் என்பதை நிரூபித்தனர். கைகழுவப்பட இருந்த தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டத்தை "எழுச்சி நாள்" கொண்டாடி மக்கள் அத்திட்டத்தைப் பெற்றனர். "அதிகாரம் பிறப்பது அமைச்சரிடமிருந்தல்ல மக்களிடமிருந்துதான்" என்பதை நிலை நாட்டினர்.

• • •

1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது ராணுவமும் தருவிக்கப்பட்டு மாணவர்களும் பொதுமக்களும் நூற்றுக்கணக்கானோர் பறவைகளைச் சுடுவதுபோலசுடப்பட்டனர் நாடே பிணக்காடாகக் காட்சி அளித்தது. இத் துப்பாக்கிப் பிரயோகங்கள்பற்றி "நீதி விசாரணை வேண்டும்" என்ற பொழுது முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் மறுத்து விட்டார்.

இன்று கழக அரசில் சாதாரண நிகழ்ச்சிக்கும் நீதிவிசாரணை நடத்தப்படுகின்றது. கோவை மாவட்டம் வேட்டைக்காரன் புதூரில் விவசாயி ஒருவர் அரசாங்க அதிகாரிகளால் துன்புறுத்தப்பட்டார் என்ற பொழுது அறிஞர் அண்ணா அவர்கள் கெய்குவார் ஐ. சி. எஸ். எனும் உயர்தர அரசாங்க அதிகாரியை நியமித்துப் பொது விசாரணை நடத்தினார். சென்னையில் 68 மார்ச் 25, 26 தேதிகளில் மாணவர் — பஸ் தொழிலாளர்கள் தகராறின் காரணமாக ஏற்பட்ட தகராறுகளை விசாரிப்பதற்கு யாரும் கோருவதற்கு முன்பே சட்டபூர்வ பொது விசாரணைக்கு அண்ணா உத்திரவிட்டார். உடையார் பாளையம் துப்பாக்கிச் சூட்டிற்கு, உடன் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியை நியமித்தார். டெல்லி 'இந்திர பிரஸ்த்த பவனி'ல் செப்டம்பர் 19ல் தடியால் அடித்தே இரு மத்திய அரசு ஊழியர்களைக் கொன்றனர். இதற்கு நீதிவிசாரணை செய்ய மத்திய அரசு இசையவில்லை.

• • •

வாஞ்சிநாத ஐயரின் மனைவி "தியாகி மான்யம்" கோரி மனுச் செய்திருந்தார். முந்தைய அரசு அதை அனுமதிக்கத் தயங்கிக் கொண்டிருந்தது. 'வாஞ்சி நாத ஐயர் செய்தது தியாகமே என்று ஒப்புக்கொள்ள முன்னாளைய அரசு தயாராயில்லை—தயங்கியது; வாஞ்சிநாத ஐயர் ஆஷ்துரையைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தாமும் தற்கொலை செய்துகொண்டார்; தன்னைத்தானே மாய்த்துக்கொண்டதால், அதைத் தியாகமாகக் கருத முந்தைய அரசு மறுத்தது; "நான் அந்தக் கோரிக்கை மனுவை ஏற்றுக்

கொண்டு உதவி வழங்க உத்தரவிட்டேன். அவர் தற்கொலை செய்துகொண்ட போதிலும், 'அவருடைய உள்நோக்கம், சுதந்திரப் போராட்ட உணர்ச்சியே' என்பதை எண்ணித்தான், அதையும் தியாகமாக ஏற்று நான் உத்தரவிட்டேன்'' என்றார் சட்டமன்றத்தில் அறிஞர் அண்ணா. சுதந்திரப் போராட்ட உணர்ச்சிகளுக்குக் காங்கிரசினர் காட்டாத மதிப்பை அண்ணா காட்டினார்.

* * *

தமிழ் நாட்டில் 67–68-ல் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளில் வட இந்தியர்களுக்கு எந்த விதமான ஆபத்தும் ஏற்படவில்லை. ஆனால், அதே நேரத்தில் வட இந்தியாவில் ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சியின் போது தமிழர்கள் தாக்கப்பட்டனர். ஆக்ராவுக்குச் சென்ற கழகத் தோழர்களின் கார் தாக்கப்பட்டது. 68 ஜனவரியில் குடியரசு நாள் விழாவில் கலந்து கொள்ளச் சென்ற தமிழக அரசுக் குழுவினர் டெல்லி நகர இந்தி வெறியர்களால் தாக்கப்பட்டனர். மக்களுக்கு அண்ணா அளிக்கும் பாதுகாப்பை மத்திய அரசோ, மற்ற மாநில அரசுகளோ அளிக்கவில்லை.

* * *

அமைச்சர்கள் காங்கிரசு ஆட்சிக் காலத்தில் கவர்னர் மாளிகையில்தான் பதவி உறுதிமொழி எடுத்துக்கொள்வர். ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்களும் அவர்தம் தம்பிமார்களும் மக்கள் மத்தியில் ராஜாஜி மண்டபத்தில் அமைச்சர் பதவி உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். உறுதிமொழி நிகழ்ச்சி முடிந்தபின், தலைமைச் செயலகம் செல்வதற்கு அரசாங்க அதிகாரிகளுடனும் உயர்தரப் போலீஸ் அதிகாரிகளுடனும் வெளியே வந்தபொழுது, நேரே சென்று காரில் ஏறாமல் வெளியில் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான மக்களிடம் அளவளாவி அவர்கள் மகிழ்ச்சியில் பங்குபெற்று மக்களிடம் விடைபெற்ற பின்பே காரில் ஏறித் தலைமைச் செயலகம் சென்றனர்.

* * *

தமிழக அரசின் பரிசுச் சீட்டுகளுக்கு விற்பனையாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒவ்வொர் மாவட்டத்திலும் கலெக்டர், கல்லூரி முதல்வர்கள் அடங்கிய குழுவே குலுக்குச் சீட்டின் மூலம் தேர்ந்தெடுத்தது. காங்கிரசாட்சிக் காலத்தில் காங்கிரஸ் கட்சியினருக்கே அதிக சலுகைகள் காட்டப்பட்டன. இது போன்ற அதிகாரப் பற்றற்ற குழுக்கள் நியமிக்கப்படவில்லை. தன் கட்சிக்காரர்களின் வருத்தத்தையும் பொருட்படுத்தாது யாருக்கும் பாரபட்சமின்றி விற்பனையாளர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை வகுத்தது அண்ணாவின் நேர்மையான ஆட்சிக்கோர் எடுத்துக் காட்டு

* * *

கழக அரசின்மீது காங்கிரசினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கே சில நடைமுறைச் சிக்கல்களை உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியபோது அறிஞர் அண்ணா அவர்கள், ''நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு முழு உரிமை உண்டு. ஆகவே நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றி ஒழுங்குப் பிரச்னை கிளப்புவதால் நம்பிக்கையில்லை என்று கூறும் தீர்மானத்தை நாங்கள் விரும்பவில்லை என்ற கருத்து வரக்கூடாது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது மக்களாட்சியில் எதிர்க் கட்சிகளின் பணிகளில் ஒன்று,'' என எடுத்துக் கூறித் தீர்மானத்தை அனுமதிக்கும்படிச் சட்ட மன்ற அவைத் தலைவரை வேண்டினார். இந்நிகழ்ச்சி அறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க் கட்சிகளிடம் வைத்துள்ள நன்மதிப்பையும் அவரது பெருந்தன்மையையும் காட்டுகிறது.

* * *

அறிஞர் அண்ணா அவர்களின் ஆலோசனைப்படி சென்னை ராஜா அண்ணாமலை மன்றம் முன்பு ஆந்திர கேசரி பிரகாசம் சிலை 19-10-68 அன்று திறக்கப்பட்டுள்ளது.

* * *

பொது ஸ்தாபனங்களுக்குச் சட்ட மன்ற உறுப்பினர்கள் சென்று வருவது வரவேற்கக் கூடியதே. இருப்பினும் அதற்குச் சரியான காரணம் இருக்க வேண்டும். எனவே சட்ட மன்ற உறுப்பினர்கள் போதிய காரணத்துடனும் தேவையான முன் அறிவிப்புடனும் பொது ஸ்தாபனங்களுக்குச் சென்று வரவேண்டும்'' இது தமிழக அரசு சட்டமன்ற உறுப்பினர்களுககும் மாவட்ட கலெக்டர்களுக்கும் அனுப்பப்பட்ட உத்தரவாகும். இதன் மூலம் நிர்வாகத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின் முன்னறிவிப்பில்லாத தலையீடு தவிர்க்கப்படுகிறது.

★

## அண்ணா தம்பிக்கு எழுதிய முதல் கடிதம்-ஒரு துளி!



ஓய்வு எடுத்துக்கொண்டு உல்லாசவாழ்வு நடத்தவா, உள்ளத்திலே ஓராயிரம் ஈட்டிகள் குத்துவதுபோல, மாற்றார் நடந்துகொண்டதைச் சகித்துக்கொண்டும், தாங்கிக்கொண்டும் கழகத்தை அமைத்து, இந்த கவர்ச்சிகரமான கட்டத்துக்கு வந்திருப்பது! கழகம் பணியாற்ற வேண்டிய துறைகள் பல உள — வெளிநாடு சென்று தெரிந்துகொண்டு வந்து பணியாற்ற வேண்டிய கட்டம் இது அல்ல—இப்போது உள்ள கட்டம், நமது நாட்டை முழுவதும் நாம் பார்த்துப் பாடம்பெறும் கடடம். அந்தக் கட்டத்தில், நாம் ஆற்ற வேண்டிய பணிகள்பற்றி உன் சீரிய யோசனையைக் கூறுவதுடன் — சிறிதளவு பணமும் சேர்த்துத் தரவேண்டுகிறேன் — மாநில மாநாட்டுக்கு. புதிய கட்டம், புதிய பொதுச் செயலாளர், அவர் தலைமையில் இரண்டாவது மாநில மாநாடு-அதைச் சிறப்புற நடத்தித் தருவதிலேதான், கழகத்தின் மற்றோர் கட்டம் மலர இருக்கிறது.

அணிவகுத்து நின்று, நாம் நமது கடமையைச் செய்யவேண்டும். சில்லரைத் தகராறுகளைச் சிரித்து விரட்டுங்கள்—பெரிய இலட்சியத்துக்குப் பாடுபடுகிறோம் என்ற எண்ணம், கொழுந்துவிட்டெரியட்டும்.

—'திராவிடநாடு'

# இதயங்களை வென்ற இணையற்ற பேச்சாளர்

பேராசிரியர் மா. குமாரசாமி, எம். ஏ.

பெருந்தமிழ் நாட்டின் சிந்தனைச் சிற்பியாகவும் வாலிபர் உலகத்தின் வசீகரத் தென்றலாகவும், ஒப்பற்ற எண்ணங்கள் மலர்ந்து மணம் வீசும் சோலையாகவும், ஆயிரமாயிரம் இதயங்களின் இலட்சிய கீதமாகவும் ஒளி வீசித் திகழ்ந்த அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், எண்ணற்ற திறமைகளின் இருப்பிடமாகவும் பிறப்பிடமாகவும் விளங்கினார்கள் என்பது உலகம் அறிந்த உண்மை. ஆனால் அத்திறமைகள் அத்தனையிலும் தலை சிறந்த திறமையாக ஓங்கி உயர்ந்து ஒப்பிலாத பொலிவுடன் பிறங்கியது அவருடைய பேச்சாற்றலே ஆகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பயின்று எம். ஏ. பட்டம் பெற்றுப் பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்த 1935-ஆம் ஆண்டு முதல் கோடிக்கணக்கான மக்களின் இதயங்களை முடிவில்லாப் பெருந் துயரத்தில் ஆழ்த்திவிட்டு காலத்தின் ஒரு பகுதியாக மாறிவிட்ட 1969-ம் ஆண்டு வரை—ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகள், தமிழ் நாட்டுப் பேச்சு மேடை, அறிஞர் அண்ணா அவர்களின் மேடையாகவே விளங்கிவந்திருக்கிறது. தமிழ் நாட்டுப் பேச்சாளர்களில் இரண்டொருவர் தவிர ஏனையோர் அனைவரும், இந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக அவருடைய சொற்பொழிவுப் பாணியையே பின்பற்றி வந்திருக்கிறார்கள். கல்லூரி அரங்கங்கள், இலக்கிய மன்றங்கள், அரசியல் மேடைகள், அரசாங்க விழாக்கள், திருமண நிகழ்ச்சிகள், எங்கும், எங்கெங்கும், அவருடைய பேச்சு நடையே வீர நடை போட்டுக் கொண்டிருந்தது. ஈடு இணையற்ற அப்பெருந் தலைவருடைய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமல்ல, அந்த இயக்கத்தின் நேர் எதிரிகளாகத் திகழ்ந்தவர்கள்கூட அவருடைய பேச்சு முறையையே கையாண்டு வந்தார்கள். அப்பெருமகனாரின் கொள்கைகளையும் திட்டங்களையும் எதிர்த்து வீரமுழக்கமிட்ட பலர், அம்முழக்கத்தை அண்ணாவின் பாணியிலேயே எழுப்பிவந்த காட்சியை எண்ணற்ற முறை கண்டு களித்திருக்கிறது தமிழகம்.

எத்தனை நூறாயிரம் பேர் கடலெனத் திரண்டு குழுமியிருக்கும் கூட்டமாக இருந்தாலும், அறிஞர் அண்ணா அவர்கள், ஒலிபெருக்கியின் முன்னால் வந்து நின்று தன் வெண்கலநாத சங்கீதக் குரலால், 'அன்புள்ள தோழர்களே!' என விளித்து உரையாற்றத் தொடங்கிவிட்டால், முழு அமைதி அங்கே குடிகொள்ளும். எவ்வளவு நேரம் அச்சொல்லின் செல்வர் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தாலும் அவ்வளவு நேரமும் அத்தனை ஆயிரம் மக்களின் உள்ளங்களும் அச்சொற்பொழிவின் பின்னாலேதான் சென்று கொண்டிருக்கும். அவர் உரையாற்றிக்கொண்டிருக்கும்போது, ஒன்றன்பின் ஒன்றாக, அணி அணியாக, அழகழகாகச் சொற்கள் வந்து விழுந்துகொண்டே யிருக்கும். மலையிலிருந்து விழுகிற அருவிபோல, யாழிலிருந்து எழுகிற நாதம்போல, விண்ணிலிருந்து கொட்டுகிற மழைபோல அவருடைய உள்ளத்திலிருந்து புறப்படும் வார்த்தைகள் வீர உலா வந்துகொண்டே யிருக்கும் எழில் குன்றாமல் — சுவை குறையாமல் — இடையீடு இல்லாமல் தொடர்ந்துகொண்டே யிருக்கிற அச்சொற்களில், உயர்ந்த கருத்துக்கள் ஒளியைப் பாய்ச்சும்; அடுக்குத் தொடர்கள் ஆனந்த நடனமாடும்; புதிய புதிய உவமைகள் பூத்துக் குலுங்கும்; சீரிளமைத் திறம் மிகுந்த செந்தமிழ் சிரித்து விளையாடும். எவ்வளவு நேரத்திற்குப் பிறகு அந்த அறிவுலக மேதை தன் சொற்பொழிவை, முடித்தாலும் கூடியுள்ள மக்கள் வெள்ளம், இவ்வளவு விரைவில் இந்த இன்னிசைக் கீதம் முடிந்துவிட்டதே — இன்னும்சற்று நேரம் இது தொடரக்கூடாதா —இன்னும் சற்று இன்பம் நம் உள்ளங்களில் பாயக் கூடாதா என்றுதான் எண்ணிஎண்ணிஏங்கும்.

"குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்பட வேண்டும்" என்பது தமிழ்நாட்டு முதுமொழி அறிஞர் அண்ணா அவர்களுடைய சொற்பொழிவுகளுக்கு இப்பொன்மொழி முற்றிலும் பொருந்தும். தாக்கப்பட்டாலும் அறிஞர் அண்ணா அவர்கள் சொற்பொழிவுகளால் தாக்கப்பட வேண்டும் என்பது அண்ணாரின் அரசியல் எதிரிகள் பலருடைய அந்தரங்க ஆசை தன்னேரிலாத அத்தென்னகத் தலைவரையோ அல்லது அவருடைய கட்சியையோ தாக்கிப் பேசினாலும், தப்பித் தவறிகூட அதேவகையான சொற்களால் அவர் விடை அளித்ததில்லை. மிகக் கடுமையாகத் தாக்கியவர்களுக்கும் மிக இனிமையான சொற்களின் வாயிலாக மிகப் பெருந்தன்மையான முறையில் விடையிறுப்பதே அந்த மிகப் பெரிய தலைவரின் மிகச் சிறந்த

அடுத்த இதழில்

அறிஞர் அண்ணா

அவர்களின்

படமும் பாடமும் (2)

என்ற தம்பிக்கு மடல் இடம்பெறும்.

இயல்பாக அமைந்திருந்தது. இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் இயல்புடையவராகத் திகழ்ந்த அத் திருமகனார், இன்னா சொன்னார்க்கும் இனியவே சொல்லும் இயல்புடையராக விளங்கியதில் வியப்பென்ன இருக்க இயலும்?

அறிஞர் அண்ணா அவர்கள் கல்லூரி மாணவராக இருந்த காலத்தில், தம் ஓய்வு நேரத்தில் பெரும் பகுதியைச் சென்னை கன்னிமரா பொது நூல் நிலையத்திலேயே—அங்குள்ள பல சிறந்த நூல்களைப் படித்து மகிழ்வதிலேயே செலவழித்தார்கள். பொதுவாழ்வு எனும் போர்க்களத்தில் புகழ் செறிந்த தளபதியாகப் பணியாற்றிய பிற்காலத்திலும் ஓய்வு கிடைத்த போதெல்லாம் பல திற நூல்களைத் தவறாமல் பயில்வதைத் தம் தலையாய கடமைகளில் ஒன்றாக அவர் கொண்டிருந்தார்கள். விரிந்து பரந்த இந் நூற்பயிற்சியின் பயனாகவும், இயல்பாகவே தமக்கு அமைந்திருந்த நுண்மாண் நுழை புலத்தின் விளைவாகவும், வியந்து போற்றத் தக்க சீரிய நினைவாற்றலைப் பெற்றிருந்த காரணத்தாலும் எந்த நேரத்திலும், எந்தப் பொருளைப் பற்றியும், எத்தகைய முன் அறிவிப்பும் இன்றி, செம்மை சான்ற முறையில் பேசவல்ல திறன் அவருக்கு அமைந்திருந்தது.

இருபது ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள், சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் தமிழ் மன்றச் சிறப்புக் கூட்டம். தேனடையை மொய்க்கும் ஈக்களென மாணவர் வெள்ளம் அலைமோதிக் கொண்டிருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் பேசத் தொடங்கினார்கள். “இன்று இங்கு நான் எப்பொருள் குறித்துப் பேச வேண்டும் என்பதை எனக்கு முன் பேசிய மாணவர் தலைவர் சுட்டிக் காட்டவில்லை. இடையருத வேலைகள் பல எனக்கு இருந்த காரணத்தால் நானும் எபபொருள் பற்றிப் பேசுவது என்பதை முன்கூட்டியே சிந்தித்து முடிவு செய்ய முடியவில்லை” என்று கூறிவிட்டு, ஒரு கணம் தன் பேச்சை நிறுத்தினார்கள். அடுத்த கணம், ‘பொருளைத்தானே தேடிக் கொண்டிருக்கிறோம் இப்போது! பொருள் என்பதும் ஒரு பொருள்தானே! அந்தப் பொருள் பற்றியே பேசினால் என்ன?” என்று தொடங்கினார்கள். மாணவர்களின் கைதட்டல் மண்டபத்தை அதிர வைத்தது. ஒரு மணி நேரத்திற்கு மேல் ஓடிய அச்சொற்பொழிவு, அள்ளும் சுவை நிறைந்த தெள்ளுதமிழ் இலக்கியமாக அமைந்தது. மேடையில் ஏறிய பிறகு—சொற்பொழிவைத் தொடங்கிய பிறகு — திடீரென்று எடுத்துக்கொண்ட தலைப்புதான். ஆனால் அந்தக் காரணத்தால் சொல்லின் சுவையோ பயனோ எழிலோ ஏற்றமோ துளியளவும் மாற்றுக் குறைந்ததாக அமையவில்லை.

அண்ணா அவர்களுடைய சொல்லோவியங்கள், பட்டங்கள் பல பெற்ற அறிஞர் பெருமக்களையும் கவர்ந்து இழுத்தன— படிப்பறிவே இல்லாத பாமர மக்களையும் கொள்ளைகொண்டன; துடிக்கும் குருதியும் துள்ளும் இதயமும் படைத்த கட்டிளங்காளைகளுக்கும் தெவிட்டாத தேனாகத் தித்தித்தன —அமைதியான போக்கும் அடங்கிய நிலையும் படைத்த முதிய வயதினர்க்கும் மூவாத இன்பத்தை அளித்தன; பெரு விரைவும் மிகுந்த அரசியல் மேடைகளுக்கும் சுவையூட்டின—எந்தச் சிக்கலையும் ஆர தீர இருந்து அலசி ஆராயத் தக்க இயல்புடைய சட்டமன்றப் பாராளுமன்றங்களுக்கும் உயிரோட்டம் அளித்தன.

தலைவர்கள் பலரை உருவாக்கிய பெருந்தலைவராக அண்ணா அவர்கள் விளங்கியதைப் போலவே பேச்சாளர்கள் பலரைப் படைத்த பெரும் பேச்சாளராகவும் அவர்கள் திகழ்ந்தார்கள். அப்பேரறிவுப் பெருந்தகையின் சொற்பொழிவுகளைக் கேட்டுக் கேட்டு, அப்படிக் கேட்டுப் பெற்ற ஞானத்தின் விளைவாகச் சிறப்பார்ந்த சொற்பொழிவாளர்களாக உயர்ந்து விளங்கும் திறன் பெற்றோர் எண்ணற்றோராக இன்று தமிழகத்தில் பவனி வருகின்றனர். தமிழ்த்திருநாட்டு அரசியல் கட்சிகள் அனைத்திலும்—சமுதாய இயக்கங்கள் எல்லாவற்றிலும் — உயர்நிலைப் பள்ளிகள் கல்லூரிகள் பலவற்றிலும் அத்தகையோரை நாம் பெருமகிழ்ச்சியோடு காண முடிகிறது.

செந்தமிழ் மொழியில் எவ்வாறு சிந்தையை அள்ளும் வகையில் பேசவல்ல பேராற்றல் அண்ணா அவர்களிடம் பொதிந்து கிடந்ததோ அதே அளவிலும் வகையிலும் ஆங்கில மொழியிலும் அற்புதமாக உரையாற்றவல்ல அரிய திறன் அந்த அன்பு உருவத்திடம் தஞ்சம் அடைந்திருந்தது. இந்தியப் பாராளுமன்றத்தில் அரிய ஆங்கில நடையில் அவர் ஆற்றிய பேருரைகள், அம்மாமன்றத்தின் பெருமையையே பல மடங்காக உயர்த்திவிட்டன. இது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை என்று அப் பெருமன்ற உறுப்பினர்கள் இன்றும் சொல்லிச் சொல்லி மகிழ்கின்றனர்.

ரோமாபுரிக்கு ஒரு சிசரோ; கிரேக்க நாட்டுக்கு ஒரு டெமாஸ்தனிஸ்; சோவியத் பூமிக்கு ஒரு ட்ராட்ஸ்கி; அமெரிக்காவுக்கு ஓர் இங்கர்சால்; இங்கிலாந்துக்கு ஒரு வின்ஸ்டன் சர்ச்சில்; ஆம்! அந்த நாடுகள் பெற்ற பெறற்கரிய அச் சொல்லின் வேந்தர்களைப் போலத் தமிழ்த் திருநாடு பெற்ற தன்னிகரற்ற சொல்லின் செல்வர் அறிஞர் அண்ணா அவர்கள்.

சென்ற முப்பத்தைந்து ஆண்டுகளாக நடமாடும் பல்கலைக் கழகமாக விளங்கி, எண்ணற்ற முறை விரிவுரைகளாற்றி, தமிழ் மக்களையெல்லாம் வீரத்தின் திரு உருவங்களாக மாற்றி அமைத்த மாவீரர் அண்ணா அவர்கள், இன்று நடமாடாத பல்கலைக் கழகமாக அமைந்து, சென்னைமா நகரில் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் அமைதியான முறையில் அதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். சென்று செவி மடுப்போமா?

### அண்ணா சொன்னவை!

தமிழ் அல்லாத மற்ற மொழிகளில் வருத்தப்பட்டுச் சொல்லும் சொற்களும், கோபம் துன்பம் வந்தால் பிறக்கும் உரத்த ஓசைகளும், இளைத்த ஒலிகளும் நிரம்பிக் கிடத்தலால் அவையெல்லாம் செயற்கை மொழிகளென்றும். தமிழில் வருத்தமின்றி இயல்பாற் பிறக்கும் சொற்களே நிறைந்து, கோபத்தாற் பிறக்கும் வெடுப்போசையும், துன்பத்தாற் பிறக்கும் உளைப்பொலியும் இன்றி. எல்லாம் இனிய குணத்திற் பிறக்கும் மெல்லோசைகளாய் இருத்தலின், தமிழ் இன்ப வடிவாய் விளங்கும் இன்பம் வாய்ந்த மொழியாம் என்பதை அன்பர்கள் கருத்திற் பதியவைத்து அதனை வளரச் செய்வதற்கான எல்லா முயற்சியுங் குறைவறச் செய்தல் வேண்டும்.

—“திராவிட நாடு”

# ‘விழா’

ஆண்டு முழுவதும், ஏதாவது ஒரு ‘வாரம்’ கொண்டாடுவது என்பது இப்போதெல்லாம் மிகச் சாதாரணமாகி வருகின்றது. எந்த ‘வாரம்’கொண்டாடுகின்றூர்களோ அந்த வாரத்திற்கு உரிய இடத்தில் அலங்காரங்கள் மிகுவதும், அதிகாரிகளின் நடமாட்டம் பெருகுவதும், வேடிக்கைகள் நிலவுவதுமாக ஒரு கிழமை அங்கே ‘கோலாகலம்’ கொலுவிருக்கிறது. அந்தக் கிழமை முடிந்ததும் பழைய படியே அங்கே வெறுமை வந்து விடுகின்றது.

இரயில்வேயில் ‘வாரம்’ கொண்டாடுகின்றூர்கள்; ஒவ்வொருதுறையிலும் ‘மரியாதை வாரங்கள்’ கொண்டாடுகின்றூர்கள்; மரம் நடுவதற்கு வாரம் இருக்கிறது; ஐந்தாண்டுத் திட்டத்தைப் பிரச்சாரம் செய்யவும் வாரம்! இப்படிஎத்தனை எத்தனையோ வாரங்கள் வளர்ந்து கொண்டேயிருக்கின்றன.

எந்த வாரமாக இருந்தாலும், அதைக் கொண்டாடுவதன் நோக்கம், ஆண்டு முழுவதும் அந்தச் செய்தியின் நினைவுமனதில்நிலைக்க வேண்டும், மக்கள் அதனுல் பயன் படவேண்டும் என்பதேயாகும். ஆனுல் நடைமுறையில் ‘விழா’ ஏதாவது பயனளிக்கிறதா என்று பார்த்தால், மறுபடியும் அந்தவிழா வருகின்றபோதுதான் அதைப் பற்றிய நினைப்பே வருகின்றது பலருக்கு. இத்தனைக்கும் நடத்தப்படுகின்ற விழாக்களில் பல மக்களுக்கு உண்மையிலேயே பயன் படக்கூடிவையாகும். ஆனுலும் மக்களுடைய மனம் அந்த விழாக்களில் முழுதுமாக ஈடுபடவில்லை. மக்கள் மனம் மட்டும் என்ன, அதைக்கொண்டாடுகின்ற அதிகாரிகளின் மனமே அதில் ஈடுபடுமோ என்னவோ தெரியவில்லை.

இதற்கு என்ன காரணம்? இந்த விழாக்களையும், அவை கொண்டாடப்படும் முறையையும் பார்த்தால், இதனுல் மக்கள் பயன்பட வேண்டும் என்பதோ, திருந்த வேண்டும் என்பதோ நோக்கமாகத் தெரிவதில்லை. மாருக இதனுல் பிரச்சாரம் நடந்தால் போதும் என்று கருதுவதுதான் நோக்கம் போலும் என்று நினைக்கக்கூடிய வகையில் அந்த விழாக்கள் அமைகின்றன.

அந்தப் பிரச்சாரமும், அந்தத் துறையைப் பற்றிய செய்திப் பிரச்சாரமாக இராமல், ‘அரசாங்கத்தின் சாதனைகளை’ப்பற்றிய பிரச்சாரமாக முடிகின்றது. அதனுல் தான் சர்க்கார், இந்தத் துறையில் எவ்வளவு உற்சாகமாக ஈடுபடுகின்றூர்களோ. அவ்வளவு உற்சாகமாக மக்கள் இதிலே நாட்டம் கொள்ளுவதில்லை.

எனவே இந்த முயற்சிகளினுல் உண்மையிலேயே பயன் விளைய வேண்டுமானுல், எந்த விழாவாக இருந்தாலும், அதில் சர்க்கார் பெறும் பங்கைவிடப் பொதுமக்கள் பெறும்பங்கு பெரியதாக இருக்கவேண்டும். அதனுல் தங்களுக்கு உண்மையிலேயே நன்மையிருப்பதாக மக்கள் கருத வேண்டும். இப்போது கொண்டாடப்படுகின்ற விழாக்களிலும் இரண்டொன்றில் மக்கள் கொஞ்சம் நாட்டம் கொள்ளுவதற்குக் காரணம், அவற்றினுல் தாங்கள் நன்மை பெறுகின்ருேம் என நம்புவதே ஆகும்.

எடுத்துக்காட்டாகக் கைத்தறி வார விழாவைக் காண்போம். மற்ற வார விழாக்களைவிட இதில் மக்களுடைய தொடர்பு மிகுதியாக இருக்கிறது. அதனுல் மற்ற விழாக்களில் இருப்பதை விட இதிலே மக்களுடைய அக்கறை மிகுந்திருக்கிறது.

இன்னென்று; இந்த வாரங்களைக் கொண்டாடும்போது,இவற்றிற்கும் விழா என்று பெயர் அமைந்திருக்கின்ற காரணத்தினுலோ என்னவோ, இவற்றைக் கொண்டாடும்போது, மற்ற மத விழாக்களில் இருப்பது போன்ற ஆடம்பரங்களைக் கூட்டி விடுகின்றனர். பல இடங்களில் ‘வாணங்கள்! அதிர் வேட்டுக்கள்!

விழா என்ற பெயர் வீண் வேடிக்கைகளைத் தருவதற்கு என்று பொதுமக்கள் பொருள் கொண்டு விடாது பார்த்துக் கொள்ள வேண்டும். விழா என்ருல் அதனுல் என்ன விளைவு என்று பார்த்து, அந்த விளைவு நல்லதாகவும், நாம் விரும்புகின்ற வகையிலும் அமைய வேண்டுமானுல், அதற்கு ஆன வழி துறைகள் என்னென்ன என்று கண்டறிந்து அந்த வகையிலும், முறையிலும் விழா கொண்டாடுவதுதான் உண்மையிலேயே நல்ல விளைவு காண்பதற்கான வழியேயன்றி வெறும் வேடிக்கைக் களியாட்டமன்று.

இனி வரும் ‘வார’ங்களாவது வேடிக்கைகளோடு முடியாமல், சம்பந்தப்பட்ட துறை பற்றிய விஷய விளக்கங்களைப் பொது மக்களுக்கு உணர்த்தும் வழியிலும், வகையிலும் வரவேற்கப் படும் என நம்புகின்ருேம்.

1958—‘திராவிடநாடு’ தலையங்கம்
(அண்ணு எழுதியது)



## அண்ணுவின் உவமை

“நண்பர், ‘ஆம்லெட்’ செய்ய வேண்டும் என்கிருர். உன்னிடம் இருக்கும் ‘முட்டை’யைக் கொடு. ‘ஆம்லெட்’ செய்து சாப்பிடுவோம் என்கிருர். நிச்சயம், தருவேன்! அப்படித் தருவதால், கோழியையே அவரிடம் ஒப்படைத்து விடுவேன் என்று அவர் எதிர்பார்த்தால், நிச்சயம் ஏமாந்து போவார்.

‘ஆம்லெட்’டுக்காக கோழியை, ஒரு அரசியல் தேர்தலுக்காக கொள்கையைக் கொடுத்துவிடக் கூடியதல்ல, திராவிட முன்னேற்றக் கழகம்.”

பிறந்தநாள் வாரத்தில்வெளிவருகிறது! 14.9.69.
முந்நூறு பக்கங்கள் காலிகோ பைண்டு!

அறிஞர் அண்ணாவின் திருஉருவப் படம்
போற்றிக் காக்க வேண்டிய பொக்கிஷம்

# அறிஞர் அண்ணாவின்
# சிறு கதைகள்

## முதல் பகுதி

புத்தகம் வேண்டுவோர் முன்பணம் அனுப்பி பெயரை பதிவு செய்துகொள்ளவும் (செப்டம்பர் முதல் வாரத்திற்குள்)

**பரிமளம் பதிப்பகம்,**

9, அவின்யு சாலை, சென்னை-34.

விலை ரூ. 10

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-2
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.